பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 12 சனிக்கிழமை 24.02.2018 கதிர் 111

## தூதுவரின் பதவி துறப்பை ஏற்றார் மைத்திரிபால?

கொழும்பு, பெப்.24

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் அமாரி விஜேவர்த்தனவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் பக்கம் 18

# ஈ.பி.டி.பி. உட்படத் தமிழ்க் கட்சிகளினது ஒத்துழைப்பை கோருகிறது கூட்டமைப்பு

### உள்ளூராட்சிச் சபையில் ஸ்திரமான ஆட்சிக்கு

கொழும்பு, பெப்ரவரி 24

உள்ளூராட்சிச் சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. உட்படத் தமிழ்க் கட்சிகளின் ஆதரவை – ஒத்துழைப்பைக் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் அலுவலகத்தில் நடைபெற்றது. பக்கம் 03

## இந்து ஆலயம் யாழில் உடைப்பு

யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயம் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்களால் உடைத்துச்சேதமாக்கப்பட்டுள்ளது. பக்கம் 18

## இது ரகசியம் அல்ல!

இலங்கையின் அரசியல்வாதிகளில் அதிகம் பணக்காரர்களான முதல் பத்துப் பேரின் பெயர் வரிசையை அமெரிக்காவின் புகழ் பெற்ற வர்த்தக இதழான 'FORBES' சஞ்சிகையை பக்கம் 18

## விட்ட தவறுகளைத் திருத்த கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, பெப்.24

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதனைத் திருத்தி அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் நேற்றைய கூட்டத்தின்போது அதி கூடிய பக்கம் 03

## பொன்சேகாவிடம் சட்டம்; கலக்கத்தில் மஹிந்த தரப்பு!

கொழும்பு, பெப்.24

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்குச்சட்டம் மற்றும்ஒழுங்குஅமைச்சு வழங்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியதை அடுத்து, மஹிந்த தரப்பு கலவரமடைந்துள்ளதாகக்கூறப்படுகின்றது.

கடந்த அரசின் காலத்தில் நடந்த, காணாமற்போனசம்பவங்கள், ஆள்கடத்தல்,கொலைகள் மற் பக்கம் 18

## உ.கிழங்குக்கு விசேட வர்த்தக வரி அதிகரிப்பு

கொழும்பு, பெப்.24

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான விசேட வர்த்தக வரி நேற்று நள்ளிரவு முதல் 29 ரூபாவால் அதிகரிக் பக்கம் 18

## அமைச்சரவை மாற்றம் நாளை

கொழும்பு, பெப்.24

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப் படவுள்ளதாகச் சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறை வைத்தியசாலையின் பல அபிவிருத்தித்திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் அமைச்சரவையில் மாற்றங்களை மேற்கொள்ளத் தேசிய பக்கம் 18

## அமைச்சரவை மட்டுமல்ல அரச கொள்கையும் மாற்றம்

### ஐ.தே.க. அமைச்சர்கள் மத்தியில் ரணில்



கொழும்பு, பெப்.24

அமைச்சரவையில் மாற்றம் மட்டுமல்லாது அரசில் கொள்கை ரீதியான மாற்றங்களும் ஏற்படுத்தப்படும் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் 18

## ஐ.தே.க. இளம் தலைகளுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள்

### பெரும் தலைகளுக்கு ஆப்பு

கொழும்பு, பெப்.24

ஐக்கிய தேசியக் கட்சியின்முக்கியப்புள்ளிகளின் அமைச்சுப் பதவிகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமையினருக்கும் முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை வழங்குவதற்கும் ஐ.தே.கவின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் என அறிய முடிகிறது.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட் பக்கம் 18

## அவன்ட்கார்ட் மோசடி; கோட்டா சீராய்வு மனு

கொழும்பு, பெப்.24

சர்ச்சைக்குரிய அவன்ட்கார்ட் மோசடி தொடர்பான வழக்கிலிருந்து, தான் உள்ளிட்ட பிரதிவாதிகளை விடுவிக்குமாறு கோரி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுச் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. பக்கம் 18

## களைத்துவிட்டாராம் மஹிந்த தேசப்பிரிய



கொழும்பு, பெப்.24

உள்ளூராட்சித் தேர்தல்கள் தம்மைக் களைப்படைய வைத்து விட்டதாகவும், தமக்கு ஓய்வு தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார் தேர்தல்கள்ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த பக்கம் 18



## கச்சதீவுக்குச் சீரற்ற படகுச் சேவை; வெயிலில் தவித்த தமிழ் பக்தர்கள்

### அதிகாரிகளின் அசட்டையே காரணம்

யாழ்ப்பாணம், பெப்.24

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவுக்குச் சென்ற தமிழ்ப் பக்தர்கள் அதிகாரிகளின் அசட்டையால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த சிங்களப் பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கைக் கடற்படையினர் தமது அதிவேகப் படகுகள் மூலம் வழங்கினர். எனினும் தமிழ்ப் பக்தர்கள் நீண்ட நேரம் வெயிலில் காத்திருக்க வைக்கப்பட்டனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்று மாலை 4 மணிக்குக் கொடியேற்றத்துடன் நற்கருணை விழாத் திருப்பலி பக்கம் 18

# தமிழருக்குச் சேவை செய்யக் கூடிய அமைச்சை மனோவுக்கு வழங்குங்கள்!



## கொழும்பு இந்து இளைஞர் மன்றம் கோரிக்கை

நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசனுக்கு தமிழ் மக்களுக்குச் சேவை செய்யக் கூடியதான சிறப்பானதொரு அமைச்சரவை அமைச்சர் பதவியை கூட்டு நல்லாட்சி அரசு வழங்கிக் கௌரவிக்க வேண்டும் எனக் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இந்த நல்லாட்சி அரசு அமையப்பெற மிகவும் முக்கியமான பிரதான காரணகர்த்தாவாக விளங்கியவர்.

அவரது பெரிய பங்களிப்புக் காரணமாகவே நல்லாட்சி அரசு தோற்றம் பெற்றது என்பதனை சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என முழு நாட்டு மக்களுமே நன்கறிவர். ஆனால், அவரது நல்லெண்ணத்திற்கும், நாட்டின் அமைதிக்காக அவர் முன்னெடுத்த பெரிய முயற்சிக்கும் கடந்த இரண்டு வருடங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சுப் பதவி எவ்வகையிலும் பொருத்தமற்ற ஒன்றாகவே நாம் கருதுகின்றோம்.

நல்லாட்சி அரசு தோற்றம் பெறுவதற்கு எதிராக நின்று செயற்பட்டதுடன், தமிழ் மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், திரைமறைவிலும் எதிராகச் செயற்பட்டவர்களுக்கும் தமது சமூகங்களை உயர்நிலைப் படுத்தவும், தமது சமூகத்தவர்களுக்கு விரும் பியவாறு வேலை வாய்ப்புக்களை வழங்கவும், தமது சமூக மக்கள் வாழும் பிரதேசங்களை விரும்பியவாறு அபிவிருத்தி செய்யவும் தேவையான வளங்களையும், வசதிகளையும் கொண்ட அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

இது மிகவும் வேதனை தந்த விடயமாக அமைந்திருந்தது. இதனை இனி மாற்றியமைக்க வேண்டும். கொழும்பு வாழ் தமிழ் மக்களை மட்டுமல்ல வடக்கு கிழக்கு மற்றும் மலையக மக்களையும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக நன் கறிந்து அதற்காக தனது உயிரையும் பொருட்படுத்தாது செயற்பட்டு வரும் மனோ கணேசனின் செயற்பாடுகள் ஒரு சிறுகுறுகிய வட்டத் தினுள் திட்டமிட்டு முடக்கப்பட்டிருந்ததாகவே கொழும்பு இந்து இளைஞர் மன்றம் கருதுகின்றது.

இதனை இனிமேலும் பொறுமையுடன் கை கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இதற்கு முற்றுப் புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

தகுதியில்லாதவர்களுக்கும், தமிழர்களை அடக்கி அடிமை களாக வைத்திருக்க முயல்பவர்களுக்கும் தமிழர் பிரதேசங்களில் அதி கூடிய அதிகாரங்களை வழங்கி தமிழர்களை அடக்க முனைவதை இனியும் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே, ஆட்டம் கண்டு மீண்டும் ஆட்டம் காணாது தொடரவுள்ள நல்லாட்சி அரசில் இடம்பெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தில் மனோ கணேசனுக்கு உரிய அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும் என்பதில் இலங்கை வாழ் தமிழ் மக்களுடன் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் உறுதியாக உள்ளது.

அவ்வாறு இடம்பெறவில்லையாயின் அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுவும் கொழும்பு இந்து இளைஞர் மன்றத்திற்கு நன்கு தெரியும்.

மக்களது ஆணையைத் தேர்தல் மூலமாக நேரடியாகப் பெறாது தேசியப் பட்டியல் மூலமாக அமைச்சுப் பதவிக ளைப் பெற்று அதனை வெறுமனே கௌரவப் பதவிகளாக நினைத்து எவ்விதமான மக்கள் சேவையும் புரியாது பதவிகளை கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் சிலர் மத்தியில் மக்களது பெரும் ஆதரவைத் தாம் பெற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாது அரசுக்கும் அதனைச் சார்பாகப் பயன்படுத்தி தமிழரின் பெருந்தன்மையை அவர்களுக்குப் புரிய வைத்துவரும் மனோ கணேசன் போன்ற உண்மையான தகுதியுடையவர்கள் அதற்குரிய கௌரவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் கோரிக்கையாகும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைச்சர் அனந்தியின் ஏற்பாட்டில் மாபெரும் நடமாடும் சமூக சேவை

## இன்று புதுக்குடியிருப்பில், நாளை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், பெப். 24

போரால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி வாழ் மக்களின் நலன் கருதி வட மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் ஏற்பாட்டில் அந்தந்த மாவட்ட செயலகத்துடன் இணைந்து சமூக சேவைகள் தொடர்பான மாபெரும் நடமாடும் சேவை நடைபெற உள்ளது.

இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக வலுவூட்டல், நலனோம் புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்காவும் நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கிளி நொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இந்த மாபெரும் நடமாடும் சேவையின் போது கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்பட உள்ளன.

மூக்குக் கண்ணாடி வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான வீடு திருத்தம், மாற்றுத்திற னாளிகளுக்கான மலசலகூட வசதிகளை வழங்கல், மாற்றுத் திறனாளிகளுக்கான உபகர ணம் வழங்கல், பூர்த்தி செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடத்திற்கான காசோலை வழங்கல், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி, மாற்றுத்திறனாளியாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி, முதியோர் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல், நலிவுற்றோருக்கான தற்செயல் நிவாரணம் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

இந்த மாவட்டங்களில் உள்ள மேற்குறிப்பிட்ட தேவைகளை உடையோர் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வட மாகாண சமூக சேவைகள் அமைச்சு, வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற் றின் நெறிப்படுத்தலிலும் மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களம், அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம், முதியோர்களுக்கான தேசிய செயலகம் என்பவற்றின் பங்குபற்றலுடனும் இந்த நட மாடும் சேவை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உர மானிய மொத்த சந்தை விலைக் கட்டணம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில்!

அடுத்த பயிர்ச் செய்கை பருவகாலத்திலிருந்து உர மானியத்திற்கான மொத்த சந்தை விலைக் கட்டணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

ஒரு வருடத்திற்கு ஒரு ஹெக்ரேயர் பயிர்ச் செய்கை நிலத்திற்கு உரமானியமாக 25 ஆயிரம் ரூபா வைப்பிலிடப்படும். எதிர்வரும் சிறுபோக காலத்தில் இந்தப் பணம் வைப்பிலிடப்படும் என்று தேசிய உர மூலவள செயலக பணிப்பாளர் அஜித் புஷ்ப குமார தெரிவித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாதாள உலக குழு உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு!

பாதாள உலக கும்பலின் பிரபல தலைவர் என இனங் காணப்பட்டிருந்த டீ.மஞ்சு பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்துள்ளார்.

வத்தளை பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இந்த நபரைக் கைது செய்ய முயற்சித்த வேளையில் பொலிஸாரின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டிலேயே அவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தின் போது பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மேலும் இரு உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# செயலாளர்கள் பற்றிய விவரங்களை ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும்


## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, செப். 24

அங்கத்தவர்கள் எந்தெந்தக் கட்சிகளில் இருந்து தெரிவானார்களோ, அந்தக் கட்சிகளின் செயலாளர்களுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக நியமிக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் 2 ஆம் திகதி செயலாளர்கள், அங்கத்தவர்கள் பற்றிய விவரங்களை ஆணைக் குழுவுக்கு அறவிக்க வேண்டும்.

இந்த விவரங்கள் மார்ச் மாதம் 3



ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படும் என்று மஹிந்த தேசப் பிரிய கூறினார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மொத்தமாக 50 சதவீதத்திற்கு மேலான அங்கத்தவர்கள் வெற்றி பெற்ற அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரையும் உப தலைவரையும் பெயரிடலாம்.

அடுத்த மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் அந்நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும். கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் 5 ஆயிரத்து 75 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். இவர்களில் 535 பேர் பெண் களாவர்.

ஒரு சில உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களை நியமிக்குமாறு அரசியல் கட்சிகளை நிர்ப்பந்திக்க முடியாது. எவ்வாறேனும் பெண் பிரதி நிதித்துவத்தைக் குறைக்கும் எண்ணம் கிடையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# காலநிலை இன்று மாறும்

கொழும்பு, பெப்.24

இலங்கையில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையில் திடீர் மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று முதல் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கலாம் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் ஏனைய பகுதிகளில் காலை மற்றும் இரவு நேரத்தில் தொடர்ந்து குளிரான காலநிலை நிலவும் எனவும், மலையகப் பகுதிகளில் பனிமூட்டத்துடனான காலநிலை நிலவும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ஐ)

# கச்சதீவு அந்தோனியாருக்கு 40 அடி உயரமான கொடி மரம்

கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவின்போது 40 உயரமுடைய கொடிமரத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றி வைத்தார்.

இதன்போது கச்சதீவு அந்தோனியார் ஆலயத்துக்குச் சுமார் 2 லட்சம் ரூபா மதிப்பிலான தேக்கு மரத்தால் ஆன 40 அடி உயரமுள்ள கொடி மரம் தமிழகப் பக்தர்களால் கொண்டு செல்லப்பட்டது.

கச்சதீவு விழாவில் பங்கேற்பதற்காக இந்தியாவில் இருந்து 1,532 ஆண்கள், 336 பெண்கள், ஆண் குழந்தைகள் 29, பெண் குழந்தைகள் 23 பேர் என மொத்தம் 1920 எனப் பக்தர்கள் வந்துள்ளனர். 2,103 பக்தர்கள் தங்களின் பெயர்களைப் பதிவு செய்திருந்த நிலையில் இந்தியாவில் இருந்து 1,920 பக்தர்கள் மட்டுமே கச்சதீவு சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து சிங்களம் மற்றும் தமிழ் பக்தர்கள் என 6500 பக்தர்கள் சென்றுள்ளனர்.

இலங்கை – இந்திய தமிழ்ப் பக்தர்களால் நிறைந்து காணப்படும் கச்சதீவு இந்த வருடம் சிங்களப் பக்தர்களால் நிறைந்து காணப்படுகின்றது.

இதில் தலைமன்னார், நெடுந்தீவு, யாழ்ப்பாணம், காலி மாவட்ட பக்தர்கள் மற்றும் பங்கு தந்தையர்களும் கலந்துகொள்கின்றனர். (ஐ)

# பட்டப்பகலில் நகைகள் வவுனியாவில் திருட்டு!

வவுனியா – பட்டாணிச்சூர் 2ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள், அங்கிருந்த பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளார்கள் என நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வவுனியா – பட்டாணிசூர், 2ஆம் ஒழுங்கையில் வாடகை வீட்டில் வசித்து வந்த யுவதி ஒருவர் நேற்று மதியம் வீட்டைப் பூட்டிவிட்டு உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன்போது வீட்டின் கதவைத் திறந்து அலுமாரியை உடைத்து உள்ளே இருந்த சுமார் 9 பவுண் நகைளைத் திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

பிற்பகல் 2.15 மணியளவில் வீடுதிரும்பியபோது வீட்டின் கதவு திறக்கப்பட்டிருந்ததை அவதானித்த அந்தப் பெண், உடனடியாக பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்திச் சம்பவத்தைத் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.அத்தனாயக்கதலைமையிலானபொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-100)

# நானுஓயாவில் ரயில் தடம் புரள்வு; மலையக ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, பெப்.24

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச்சென்ற பயணிகள் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதால் மலையக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறித்த ரயில் நானுஓயா ரயில் நிலையத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் தடம்புரண்டதாக நானுஓயா ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயிலின் இயந்திரப் பகுதியே இவ்வாறு தடம் புரண்டுள்ளது. எனினும், அதில் பயணித்த பயணிகளை வேறொரு ரயிலுக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளதாக நானுஓயா ரயில் கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் கூறினர்.

ரயில் பாதையைச் சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதன்பின் மலையக ரயில் சேவைகள் பாதிப்பில்லாமல் தொடரும் எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## விட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானம் செலுத்தப்பட்டது.

கூட்டமைப்பு உள்ளூராட்சிச் சபைகளில் வெற்றியீட்டியுள்ள போதும் அறுதிப் பெரும்பான்மை இல்லாமையால் ஆட்சியமைக்க முடியாதுள்ளமை தொடர்பாகப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

இதனை அடுத்தே இந்தப் பின்னடைவுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக விரைவில் கூட்டமைப்பின் கூட்டத்தைக் கூட்டுவது என்றும், கூட்டமைப்பு விட்டுள்ள தவறுகள் தொடர்பாக அதில் விரிவாக ஆராய்ந்து அவற்றைத் திருத்தியமைப்பதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்வது என்றும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் நேற்றைய கூட்டத்தில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இணக்கம் கண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் அனுமதி கோரினார் எனவும், அவரது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி வேறு கூட்டணியில் போட்டியிட்டமை காரணமாக – கூட்டமைப்பின் சார்பில் அவர் சபையில் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குவதில் சிக்கல் உள்ளதால் அவரது கோரிக்கையை எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு கூட்டமைப்பின் தலைவர் கூறினார் எனவும், அந்தக் கோரிக்கையை கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுடன் கூடி ஆராய்ந்து முடிவெடுப்பது என்றும் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் விரிவாக ஆராய்ந்தனர்.

குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள 40 உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாமையால் எழுந்துள்ள சிக்கல்கள் – இடர்பாடுகள் தொடர்பில் பேசப்பட்டது.

இதன்போது கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு அந்தச் சபைக்குத் தெரிவாகியுள்ள சகல தமிழ்க் கட்சிகளின் ஆதரவை – ஒத்துழைப்பைக் கோருவது என்றும்,

இந்தக் கோரிக்கையைத் தமிழ்க் கட்சிகள் சாதகமாகப் பரிசீலித்தால் அவர்களுடன் பேசி ஆட்சி அமைப்பது தொடர்பான முடிவுக்கு வருவது என்றும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என இந்தச் சந்திப்பில் பங்கேற்ற புளொட் அமைப்பின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் 'காலைக்கதிர்'க்குத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைகளில் ஸ்திரமான நிர்வாகங்களை அமைத்து, மக்களுக்குச் சிறப்பாகச் சேவையாற்றும் நோக்குடன் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதன்படி உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. உட்பட சகல தமிழ்க் கட்சிகளினதும் ஆதரவைக் கோருவதுஎன்றும், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட்டு ஸ்திரமான உள்ளூராட்சி நிர்வாகத்தை நடத்திச் செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் என்.ஸ்ரீகாந்தா, உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோரும்,

புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், உறுப்பினர் ஆர்.ராகவன் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)

# பௌசிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.24

அரச வாகனமொன்றை முறைகேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் அமைச்சர் பௌசிக்கு எதிரான வழக்கு ஜுன் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்குச் சொந்தமான வாகனமொன்றை முறைகேடாகப் பயன்படுத்தி அரசுக்குப் பத்து லட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தினார் என அமைச்சர் பௌசி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் பிரதான நீதிவான் விடுமுறையில் சென்றிருந்தார்.

இதனையடுத்து வழக்கை விசாரித்த மேலதிக நீதிமன்ற நீதிபதி ரங்க திசாநாயக்க, எதிர்வரும் ஜுன் மாதம் 25ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்து உத்தரவிட்டார். (ஐ)

# உர மானியப் பிரச்சினைக்குத் தீர்வு; புதிய கொள்கை உருவாக்கத் திட்டம்

கொழும்பு, பெப்.24

உரமானியம் தொடர்பாகத் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு புதியதொரு கொள்கையை உருவாக்குவதன் மூலம் அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொள்ளவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர் இடம்பெற்ற முதலாவது தேசிய பொருளாதார சபை கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றபோதே இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இத் தேசிய பொருளாதாரச் சபையில் உரமானியப் பிரச்சினைக்கான புதிய கொள்கை உருவாக்கம் தொடர்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உர மானியம் வழங்குதலில் ஏற்பட்டுள்ள இரண்டு பிரதான பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது பணமாக வழங்கப்படும் உர மானிய முறையில் திருத்தம் செய்யவும் எதிர்காலத்தில் உரத் தட்டுப்பாடு ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன், விவசாயிகளின் உர தேவையைப் பூர்த்தி செய்வதுடன், விவசாய நிலங்கள் மாசடையாது பாதுகாக்கவும் பொருத்தமானதொரு செயற்திட்டத்தை தயாரிக்குமாறு தேசிய பொருளாதாரச் சபைக்கும் விவசாய அமைச்சிற்கும் ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டது.

மேலும் உரத் தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு அரசு உரம் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களின் பெயர் விவரங்களைப் பேண வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதற்கான சிறந்த முறையொன்றினை அறிமுகப்படுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கிளைபோசேட் தடை தொடர்பாக இதன்போது பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டது. கிளைபோசேட் தொடர்பாக தற்போதுள்ள சட்டதிட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவந்து புதிய கொள்கை ஒன்றினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என தேசிய பொருளாதார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தேயிலை மற்றும் இறப்பர் பயிர்செய்யப்படும் நிலங்களில் கிளைபோசேட் பாவனைக்கு அனுமதியளிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஆய்வுவொன்றினை மேற்கொண்டு புதிய கொள்கைகளை உருவாக்கவும் இதன்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஒன்றிணைந்து சாதிப்போம்!

போரினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் பாதிப்புற்றோருக்கு இழப்பீடுகள், நிவாரணங்கள், உதவியளித்தல், நீதி செய்தல் போன்றவை தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்று நேற்றும் முன்தினமும் கொழும்பில் இடம்பெற்றது. ஆஸ்திரேலிய உதவி நிறுவனம், ஐ.நா. குடிப்பெயர்வு முகவர் அமைப்புகள், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஐ.நா. நிதியம் போன்றவை இந்த மாநாட்டை நடத்தியிருந்தன.

இலங்கையில் போர்ப் பாதிப்புக்களில் இருந்து மீளெழுச்சி பெறுகின்றமை தொடர்பாகப் பல விடயங்கள் அங்கு ஆராயப்பட்டன. அங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களில் முக்கியமானது ஒன்று கவனிக்கத்தக்கது.

யுத்தம் முடிந்து ஒன்பது ஆண்டுகளாகின்றன. மீள்குடியேற்றம், புனர்வாழ்வளித்தல், கைதிகள் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல் போன்றவை தொடர்பில் ஏதோ முன்னேற்றங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவை திருப்தி தரும் அளவில் நடைபெறாவிட்டாலும் கூட, ஏதோ ஒரு வகையில் முன்னகர்வு இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. எந்த விருத்தியும் இல்லாமல், முன்னகர்வும் இடம்பெறாமல் இருக்கும் விடயம் எதுவென்றால் 'பொறுப்புக்கூறல்' விவகாரம்தான். காணாமலாக்கப்பட்டோர் விடயமாக இருக்கட்டும், அல்லது பிற அம்சங்களாகட்டும், அவை பொறுப்புக்கூறலுடன் தொடர்புடையதாக இருக்குமாயின் அதில் நகர்வு ஏதுமில்லை என்பதுதான் நிலைமை.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் சில சட்டங்கள் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பெரும் இழுபறிகளுக்குப் பின்னர் அவை நிறைவேற்றப்பட்டன. காணாமற்போனோர் அலுவலகத்தை இயங்க வைப்பதற்காகப் பெரும்தொகை நிதி கூட, கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த அலுவலகத்தை இயக்குவதற்கான ஆணையாளர்களைப் பரிந்துரைக்கும் நடவடிக்கைகள் கூட ஆரவாரமாக முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அதற்கு அப்பால் அந்த விடயம் முன்னேறவில்லை. கிணற்றில் போட்ட கல்லாக அது முடங்கிப் போய்க் கிடக்கின்றது. அதற்குக் காரணம், இந்த அலுவலகம் இயங்கத் தொடங்கினால், விடயம் இறுதியில் பொறுப்புக்கூறலில்தான் போய் முடியும்.

ஆக, தனது படையினருக்குச் சிக்கல் தரக்கூடிய எந்த நடவடிக்கையையும் கொழும்பு அரசுகள் செய்யமாட்டா என்பது இப்போது ஓரளவுக்கு நிச்சயமாகிவிட்டது.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் மீள ஏற்பட வேண்டுமானால், உண்மைகளைக் கண்டறிதல், பொறுப்புக்கூறல், மீள இடம்பெறாமையை உறுதிப்படுத்தல், பாதிப்புக்களுக்கான இழப்பீடுகளை வழங்குதல் என்பன மிக முக்கியமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால், நடந்த உண்மைகளைக் கண்டறிதல் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் கொழும்பு கடைசிவரை தானாக நீதி, நியாயத்துடன் நடந்து கொள்ளாது என்பது தெளிவாகி வருகின்றமையால், இவ்விடயத்தில் சர்வதேச அழுத்தம் அதீதமாகத் தேவைப்படுகின்றது என்பது இப்போது பல தரப்புகளினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் அடுத்த வாரம் ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் மிக முக்கிய கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது.

மேற்படி விடயங்களில் இலங்கைக்குக் கடைசியாக வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசத்தில் ஒரு வருடம் முடிவுற்ற நிலையில் - இது தொடர்பாக இலங்கையினதும் இணை அனுசரணையுடன் சேர்ந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூன்று ஆண்டு கால முடிவில் - இலங்கை முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் தமது மதிப்பீடுகளை வாய்மூல அறிக்கையாக அங்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்க இருக்கின்றார். அதையொட்டி - இலங்கையின் நடவடிக்கைகள் குறித்து - சர்வதேச நாடுகளின் கருத்துப்பரிமாற்றமும், விவாதமும் இடம்பெறவிருக்கின்றன.

இந்த விடயத்தில் சர்வதேச அழுத்தத்தை முறையாக ஏற்படுத்துவதற்கான தகுந்த - உகந்த - பொருத்தமான - களமும், தளமும் அதுதான்.

இந்தப் பேரவல யுத்தத்தில் சொல்லொணாப் பாதிப்புகளை எதிர்கொண்டு, நீதி, நியாயத்துக்காகப் போராடும் தமிழினம், இந்தத் தளத்தை இம்முறையாவது ஒன்றுபட்டுப் பயன்படுத்த முன்வர வேண்டும்.

இலங்கை மீதான அழுத்தம் சுருக்குக் கயிறாகக் கொழும்பு மீது விழக்கூடியதாக இந்த வாய்ப்பை மாற்ற வேண்டும்.

இலங்கை அரசுக்கு இனிமேலும் கால அவகாசம் நீடிக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்துவிட்டது.

இதுவரை வழங்கிய கால அவகாசத்தில் உருப்படியாக ஏதும் கொழும்பு செய்யாமையால், எஞ்சிய ஒரு வருட கால அவகாசத்துக்குப் பார்த்திராமல் இப்போதே விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கமாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை வேண்டியுள்ளது.

தமிழருக்கு நீதி செய்யப்படவேண்டும் என்று விடாது வலியுறுத்தி வரும் வடக்கு மாகாண முதலமைச்சரும் அவருக்குக் கீழ் இயங்கும் தமிழ் மக்கள் பேரவையும் கூடக் காத்திரமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் இது.

அடுத்த செப்ரெம்பரில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூடும் போது தற்போதைய வடக்கு மாகாண சபையினதும், அதன் முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனதும் பதவிக்காலம் முடிவடையும் அந்தத்தை எட்டியிருக்கும்.

ஆகவே, முதல்வர் கூட இவ்விடயத்தில் ஏதேனும் காத்திரமாகச் செய்ய வேண்டுமானால் இதுவே பொருத்தமான சந்தர்ப்பம்.

சகல தமிழர் தரப்புகளும் ஒன்றிணைந்து சிலாகிக்கத்தக்க வகையில் ஏதேனும் செய்வார்களா? தமிழினம் பார்த்திருக்கின்றது.

## இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் வெளிநாட்டு மீனவர்களுக்கு எதிராக கடும் சட்டம்

எதிர்காலத்தில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களைக் கைது செய்து, அவர்களது படகுகளும் கைப்பற்றப்படும்.

இவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு மீன்பிடிப் படகுகள் தொடர்பில் அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த மாதம் சமர்ப்பித்த பிரேரணைக்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த சட்டமூல சரத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களின் மீன்பிடிப் படகுகளுக்கு எதி ராக கடும் சட்ட நடவடிக்கையும், பெரும் அபராதத் தொகையும் விதிக்கப்படும்.

இதன் அடிப்படையில், 15 லட்சம் ரூபா முதல் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா வரை தண்டப்பணம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதையற்றதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பி ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவோம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

போதையற்ற சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்பி, அதனூடாக ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

இந்தச் செயற்றிட்டத்திற்கு அனைவரும் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்குவது அவசியம். இந்த விடயம் தொடர்பில் சிரேஷ்ட உயர் அதிகாரிகளுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று எம்பிலிபிட்டிய பிரதேசத்தில், 'போதையற்ற நாடு' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

சுகாதார ரீதியில் ஆரோக்கியமான மக்கள் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கிலேயே போதைப்பொருள் பாவனை தடுப்பு தேசிய வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த வகையில், கடந்த சில வருட காலத்திற்குள் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

போதைப் பொருள் பாவனை தடுப்பு, போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் அவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் தேசிய, பிரதேச மற்றும் கிராம மட்டத்தில் பல வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக சர்வதேச பொலிஸ் சிவப்பு ஆணை



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக சர்வதேச பொலிஸின் சிவப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளின் கோரிக்கைகளை அடுத்து, சர்வதேச பொலிஸின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

'மிக்' போர் விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் இலங்கைப் பொலிஸார், உதயங்க வீரதுங்கவுக்கு அழைப்பாணை விடுத்திருந்தும், அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகாத நிலையில், நீதிமன்றத்தின் ஊடாக இந்த சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்க கடந்த 4 ஆம் திகதி டுபாய் வழியாக அமெரிக்கா செல்ல முயன்றபோது, தடுத்து நிறுத்தப்பட்டபோதிலும், சர்வதேச பொலிஸின் சிவப்பு ஆணை பிறப்பிக்கப்படாததால், அவரைக் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வரும் முயற்சிகள் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## தியத்தலாவை வெடிப்பு தொடர்பில் கண்டறிய ஐவரடங்கிய குழு

தியத்தலாவையில் பஸ் வண்டி ஒன்றில் கைக்குண்டு வெடித்த சம்பவம் தொடர்பில் கண்டறிய ஐவரடங்கிய குழுவொன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க நியமித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 12 இராணுவத்தினர் உள்ளிட்ட 19 பேர் காயமடைந்தனர்.

இராணுவ உறுப்பினர் ஒருவரின் பையில் இருந்த கைக்குண்டொன்றே இவ்வாறு வெடித்துள்ளது என ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தீவிரவாத செயல் அல்ல என இராணுவம் உறுதிப்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பஸிலுக்கு எதிரான வழக்கு ஜூன் வரை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 24

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான வழக்கு ஜூன் மாதம் 04 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களத்துக்குச் சொந்தமான நிதியைத் தவறான முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டுக்கு அமையவே, அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் திவிநெகும திணைக்களத்துக்குச் சொந்தமானநிதியை தவறான முறையில் பயன்படுத்தி ஜி.ஐ. குழாய்களைக் கொள்வனவு செய்து அவற்றை உள்ளூராட்சி மன் றங்களுக்கு விநியோகித்த சம்பவம் தொடர்பிலேயே அவர்களுக்கெதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

### நாளை

25.02.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம் கா. 7.35 வரை
திருவாதிரை மாலை. 5.58 வரை
திதி : தசமி மா. 5.44 வரை
சுபநேரம் : 9.29 – 10.59 வரை
இராகுகாலம் : 4.59 – 6.29 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# இராமேஸ்வரம் மீனவர்கள் சொந்தப் படகில் கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ளலாம்!

## அடுத்த வருடம் முதல்



கொழும்பு, பெப். 24

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு இராமேஸ்வரம் மீனவர்கள் அடுத்தவருடம் முதல் அவர்களது நாட்டுப்படகுகளில் செல்ல மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க முடியும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் ஒவ்வொரு வருடமும் இந்திய மீனவர்கள் தங்களது நாட்டுப் படகுகள் மற்றும் மோட்டார் படகுகளில் சென்று கலந்து கொள்வது வழக்கம். ஆனால் சில ஆண்டுகளாக இந்த அனுமதி மறுக்கப்பட்டது.

மோட்டார் படகில் செல்வதற்கு ஒருவருக்கு 1300 ரூபா கட்டணமாக செலுத்த வேண்டும். இந்தகட்டணத்தைசெலுத்தாத மீனவர்கள் விழாவிற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மீனவர்கள் தங்கள் சொந்த மோட்டார் பொருத்திய நாட்டுப்படகில் செல்ல அனுமதி கோரிய போதே இந்த அனுமதி தற்போது வழங்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டை வைத்துள்ள மீனவர்கள் அவர்களது குடும்பத்தினரை மட்டும் அவர்களது படகில் அழைத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கச்சதீவில் 1913 ஆம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலயம் அமைக்கப்பட்டது. 1974 இல் கச்சதீவை இலங்கை அரசிடம், இந்திய அரசு சில ஒப்பந்தங்கள் அடிப்படையில் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. 1974 க்கு பின் ஓலைக்குடா மக்கள் மத்திய, மாநில அரசுகளின் அனுமதியுடன் திருவிழாவிற்குச் சென்று வருகின்றனர்.

கச்சதீவில் நேற்று திருவிழா ஆரம்பமானது. இராமேஸ்வரம் மற்றும் அதைச் சுற்றிலும் உள்ள மீனவ கிராமங்களைச் சேர்ந்தவர்கள் நாட்டுப் படகுகளில் சென்று வருவது வழக்கம்.

இதனை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட வழக்கிலேயே அடுத்த ஆண்டு முதல் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் கச்சதீவு திருவிழாவிற்கு மோட்டார் பொருத்திய நாட்டுப் படகுகளில் சென்றுவர பாதுகாப்பு அம்சங்கள், நிபந்தனைகள், விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு செல்வதற்கு இந்திய அரசுத் தரப்பில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு சர்வோதயம் மூலம் தொழில் வாய்ப்பு

கொழும்பு, பெப். 24

வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு இளைஞர் முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டத்தினூடாக வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என சர்வோதய நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜே.எம்.தஜ்மீல் தெரிவித்துள்ளார்.

வேலையற்ற இளைஞர்களின் திறன்களை விருத்தி செய்து சொந்த வியாபார நிறுவனங்களை உருவாக்குதலும் விரிவாக்கம் செய்தலும் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வோதய நிறுவனத்தினால் இவ் இளைஞர் முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டம் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## வவுனியாவில் தேன் என்று சீனிப்பாணி விற்பனை

### குற்றவாளிகளுக்கு 14 நாள் விளக்கமறியல்

கொழும்பு, பெப். 24

வவுனியா நெளுக்குளம் ஊர்மிலாகோட்டம் பகுதியில் சீனிப்பாணியைக் காய்ச்சி பல இடங்களுக்குச் சென்று தேன் என்று தெரிவித்து பொது மக்களை ஏமாற்றி வியாபாரம் மேற்கொண்ட இருவர் ஓமந்தை பனிக்கநீராவி பகுதியில் சுகாதார பரிசோதகர்களிடம் அகப்பட்டுக் கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பனிக்கநீராவிப் பகுதியில் 27 போத்தல்களுடன் தேன் வியாபாரம் மேற்கொண்ட இருவரைப் பிடித்து சந்தேகத்தில் தேனை பரிசோதனை மேற்கொண்டபோது அது சீனிப்பாணி என்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவர்களை விசாரணைக்கு உட்படுத்தியபோது நெளுக்குளம், ஊர்மிலா கோட்டம் பகுதியிலிருந்து எடுத்து வந்து பல இடங்களில் இவ்வாறு விற்பனை செய்து வருகின்றமை குறித்து இருவரும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அவர்களிடம் கைப்பற்றப்பட்ட 27 போத்தல்களுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்டபோது அவர்கள் இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என சுகாதாரப் பரிசோதகர் கே. சிவரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு ,கிழக்கு, மலையகம்: 189 பெண் பிரதிநிதிகள் தெரிவு

கொழும்பு, பெப். 24

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியவற்றின் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து 189 பெண் பிரதிநிதிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய நடைமுறைக்கமைவாக இடம்பெற்ற இந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கலப்பு வாக்களிப்பு, எளிமையான பெரும்பான்மை, தனிப்பட்ட பெரும்பான்மை தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் பெண்களின் பிரதிநிதித்துவம் 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த மாவட்டங்களிலிருந்து 189 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்மாவட்டத்தில் 3 உறுப்பினர்களும் முல்லைத் தீவு , வவுனியா , கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா 4 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கிறது ஐ.தே.கட்சி!

கொழும்பு, பெப். 24

உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியமைக்க ஐக்கிய தேசியக்கட்சி ஏனைய கட்சிகளின் ஆதரவை பெற உத்தேசித்துள்ளது என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல இடங்களில் சபைகளின் தனியாக ஆட்சியமைப்பது கடினமானது. இதனால், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும்.



கபீர் ஹாசிம் தெரிவிப்பு

இணைந்து ஆட்சியமைக்க கூடிய இடங்களில் இணைந்து ஆட்சியமைப்போம். அது ஸ்திரமான சபையாக இருக்க வேண்டும்.

சுமார் 150 உள்ளூராட்சி சபைகளில் இவ்வாறு ஆட்சியமைக்க முடியும் எனவும் கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

## இறை இல்லத்தில் குடி இருப்போம்



தவக்கால சிந்தனை

‘உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடை சூழ்ந்து வரும். நானும் ஆண்டவரது இல்லத்தில் வெகுநாள் வாழ்ந்திருப்பேன்’(தி.பா. 23:6)

ஒருமுறை 23 ஆம் திருப்பாடலை நடித்துக் காட்டும் போட்டி இடம்பெற்றது. புகழ்பெற்ற நடிகன் ஒருவன் இத் திருப்பாடலை வெகு சிறப்பாக நடித்து வாசித்துக் காட்டினான். ஆரவாரத்துடன் எல்லோரும் கைதட்டிப் பாராட்டினார்கள். இன்னும் பலர் நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்கள். ஈற்றில் எளிமையான தோற்றம் மிக்க ஒருவர் எழுந்து, ஆயனைப் பற்றி அறிந்தவராக அல்ல, மாறாக ஆயனையே அறிந்த நல் பக்தனாக வாசித்துக் காட்டி அனைவரையும் பரவசத்தில் மூழ்கடித்தார். அவரே பரிசினையும் தட்டிக் கொண்டார்.

இறைவனை மேலெழுந்தவாரியாக அல்ல, ஆழமாக இறைவனை அறிந்தவர்களாக வாழ வேண்டும். என்றே இறை வன் விரும்புகிறார். அவரது தூய மனப்பான்மையில் நாமும் வேரூன்றி மகிழ வேண்டும் என்றே இயேசு ஆசிக்கின்றார். அவரது அன்பையும் அருளையும் பெற்று அவரது இல்லத்தில் நாளாந்தம் வாழும் பொழுது நாம் நிறைவான பேரின்பத்தை அனுபவிக்கலாம்.

இன்றைய காலக்கட்டத்தில் நாம் பலவிதமான சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றோம். விஞ்ஞான வளர்ச்சி, ஊடக வளர்ச்சி என்று பல துறைகள் வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் மனிதம், மனித நேயம், பண்பாடு, பரிவன்பு நலிவடைந்து போவதை சிதைவுறுத்தப்படுவதை அவதானிக்கலாம். நச்சு வலயத்தில் நாம் சிக்குண்டு விழாமல் காத்திடவே கடவுள் விரும்புகின்றார். அழிவைத் தவிர்த்து ஆக்கபூர்வ மான முறையில் சிந்திக்க, செயல்வடிவம் கொடுக்க முனைந்திடுவோம். உயர்ந்த சிந்தனைகளால் எமது உள்ளங்களை நிரப்பி நேர்ப்பாதையில் நடந்திடுவோம்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி

# வறட்சியால் சிறுபோகம் பாதிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி நிலை காரணமாக, பெருமளவிலான நீர்ப்பாசனக் குளங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இதனால் சிறுபோக வேளாண்மைச் செய்கை பாதிப்படைந்துள்ளது எனக் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின், மாவட்டப் பிரதி ஆணையாளர் எம்.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இம் மாவட்டத்தில் 420 சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் உள்ளன.இவற்றுள் 200 குளங்களிலிருந்து நெற் செய்கைக்கான நீர் பெறப்படுகின்றது.தற்போது நிலவும் வறட்சி காரணமாக, இக்குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது.இதனால் வயல்நிலங்களுக்கு நீரைப்பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இம் மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, வெல்லாவெளி, கிரான், செங்கலடி உட்பட பல பிரதேச செயலகப்பிரிவுகளில் குளத்து நீரை நம்பி விவசாயிகள், சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

## தம்பலகாமம் பொலிஸ் நிலையத்திற்கு அடிக்கல்



மூதூர்,பெப்.24

மூதூர் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கபில ஜெயசேகர தலைமையில் நடைபெற்றுள்ளது. தற்காலிக கட்டடமொன்றில் இயங்கிவந்தபொலிஸ் நிலையம் 6.4 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் பெரேரா, கோமரங்கடவெல, மூதூர், குச்சவெளி உதவி பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## அம்பாறையில் நெல் விளைச்சல் வீழ்ச்சி

அம்பாறை,பெப்.24

அம்பாறை மாவட்டத்தில் தற்போதைய பெரும்போக நெல் விளைச்சலில் 20 தொடக்கம் 30 வீதம் வரையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என அந்த மாவட்டத்தின் விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தெரிவித்தார்.

இம்முறை பெரும் போகத்தின் போது, அம்பாறை மாவட்டத்தில் 4 இலட்சத்து 23ஆயிரத்து 200 மெற்றிக்தொன் நெல் விளைச்சலைத் தாம் எதிர்பார்த்திருந்த போதும், 03 இலட்சத்து 42ஆயிரம் மெற்றிக் தொன் விளைச்சலையே பெற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியம் உள்ளது.

இம்முறை ஏற்பட்ட வறட்சி மற்றும் உரத் தட்டுப்பாடு போன்ற




விவசாயப் பணிப்பாளர் கலீஸ்

காரணங்களால், விளைச்சல் குறைவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இம்முறை பெரும் போகத்தில் அம்பாறை மாவட்டம் முழுவதும் 86ஆயிரத்து 786 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுமென தாம் திட்டமிட்டிருந்த போதும், 88ஆயிரத்து 16 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது நெல் அறுவடை நடைபெற்று வரும் நிலையில், ஏக்கர் ஒன்றுக்கு 90 தொடக்கம் 95 புசல் வரையில், விளைச்சல் கிடைகின்றது. கடந்த ஆண்டு பெரும் போகத்தின் போது, ஏக்கரொன்றுக்கு 120 தொடக்கம் 130 புசல் நெல் வரையில் விளைச்சலாகப் பெற்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

## ரயில் மோதி யானை பலி!



திருகோணமலை,பெப்.24

கொழும்பிலிருந்து, திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு யானையொன்று உயிரிழந்துள்ளது.

இச் சம்பவம் அக்போபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிதுல்உதுவ பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் மாத்திரம் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட யானைகள் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளன என வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

## ஊடகவியலாளர்கள் தாக்குதல் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

கல்குடா - கும்புறுமூலைப் பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் நேற்றுமுன்தினம்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஊடகவியலாளர்களை தாக்கியமை தொடர்பில் சந்தேகநபர்கள் இருவர் நீதிவான் முன்னிலையில் ஆஜராகியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆஜராகியிருந்ததுடன், வழங்கின் போது பொலிஸார் மன்றுக்கு அறிக்கையொன்றையும் வழங்கியிருந்தனர்.


கடந்த வருடம் 2017 மார்ச் 22ஆம் திகதி நல்லதம்பி நித்தியானந்தன், புண்ணியமூர்த்தி சசிதரன் என்ற ஊடகவியலாளர்கள் கும்புறுமூலைப் பகுதியில் அமைக்கப்பட்ட மதுபானசாலை தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்தவர்களினால் தாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்

மட்டக்களப்பு,பெப்.24

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு , வவுணதீவு பிரதேச செயலக தையல் பயிற்சி நிலையத்தில் தையல் தொழில் பயிற்சியை நிறைவு செய்த யுவதிகளின் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும் நற்றையதினம் இடம்பெற் றுள்ளது.

வவுணதீவு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இக்கண்காட்சி நிகழ்வு இடம்பெற்றுள்ளது. கடந்த ஆண்டில் தையல், ஐசிங்கேக், கைப்பணிப் பொருள்கள் மற்றும் ஆடை அலங்காரம்போன்றவை தொடர்பான ஒரு வருட டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த யுவதிகளே இக் கண் காட்சியிலும் விற்பனை நிகழ்விலும் ஈடுபட்டுள்ளனர்.



கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். அரசகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், திட்டமிடல் பணிப்பாளர் ரி. நிர்மலராஜ், கிராம சேவகர்களின் நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், சிரேஷ்ட தையல் போதனாசிரியை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## மட்டக்களப்பில் சாரணர் தந்தையின் பிறந்தநாள் நிகழ்வு

மட்டக்களப்பு, பெப்.24

சாரணர் தந்தை பேடன் பவலின் 161ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்றுக் காலை மட்டக்களப்பில் நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் பி.ஆனந்தராஜா தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இருந்து சாரணர் மாணவர்களின் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஊர்வலம் மாநகர நீரூற்று பூங்கா வரை சென்று பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள பேடன் பவல் உருவச் சிலைக்கு சாரண கழுத்துப் பட்டி அணிவிக்கப்பட்டு கௌரவம் அளிக்கப்பட்டது.

இதில் மாவட்ட சாரணர் சங்க தவிசாளரும், வலயக் கல்விப் பணிப்பாளருமான கே.பாஸ்கரன், மாநகர ஆணையாளர் மணிவண்ணன், மாவட்ட சாரண உதவி ஆணையாளர் வி.பிரதீபன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ப)

## வாழைச்சேனையில் விபத்து; ஒருவர் சாவு: மூவர் படுகாயம்

மட்டக்களப்பு–வாழைச்சேனைப் பிரதான வீதி வாழைச்சேனையில்நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர்பலியாகினார் அத்துடன்மூவர்படுகாயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதியில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ் விபத்துச்சம்பவித்துள்ளது. இதன்போது, புணானை ரிதிதென்னை மீராசாஹிபு வீதியைச் சேர்ந்த 22 வயதுடைய முகம்மட் ரசாக் றிபான் என்பவரே உயிரிழந்துள்ளார். மேலும், 23 வயதுடைய இஸ்மாயில் அஸ்வர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், துலக்ஷன், மற்றும் நாகையா ஜனுசன் ஆகியோர் படுகாயமடைந்து வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், விபத்துத் தொடர்பான மேலதிகவிசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்துள்ளார். (ப)

# போதுமான அரிசி கையிருப்பில்!

கொழும்பு, பெப். 24

நாட்டிற்குத் தேவையான போதுமான அரிசி கையிருப்பில் காணப்படுகிறது என சதொச மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் விற்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரும்போக அரிசி தற்சமயம் சந்தைக்குக் கிடைக்கின்றது. இதற்கு மேலதிகமாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசியும் சந்தையில் காணப்படுகின்றது.

இதனால், புதிதாக அரிசி இறக்குமதி செய்யப்பட மாட்டாது என்று சதொச நிறுவனத்தின் தலைவர் மொஹமட் றிஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை பெரும்போகத்தில் 6 லட்சம் ஹெக்ரேயர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விகிதாசார முறைப்படியே மாகாண சபைத் தேர்தல்!




**ஆராய்ந்து வருகிறது ஐ.தே.க.**

கொழும்பு, பெப். 24

மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படியே நடத்துவது குறித்து. ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருகிறது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கடைப்பிடிக்கப்பட்டது போன்ற, கலப்பு முறையிலான தேர்தல் முறையை மாகாணசபைத் தேர்தல்களின் போதும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

50 வீத உறுப்பினர்களை தொகுதி முறையிலும், 50 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையிலும் தெரிவு செய்யும் வகையில் புதிய கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்காக மாகாணசபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை வரையறை செய்வதற்கான குழுவொன்றும் அமைக்கப்பட்டு அதன் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிதாக உள்ளூராட்சித் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்புத் தேர்தல் முறையால், ஆளும் கட்சிகள் தோல்வியைத் தழுவியுள்ள அதேவேளை, இந்தத் தேர்தல் முறை குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால், ஏற்கனவே நடை முறையில் இருந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே தேர்தலை நடத்துவது குறித்து ஐ.தே.க. ஆராய்ந்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, பெப். 24

குருநாகல், மாவத்தகமை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டி - குருநாகல் வீதியின் மெட்டிபொக்க பிரதேசத்தில் இருந்து மாவத்தகமை நோக்கிச் சென்ற மோட்டார்சைக்கிள், ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணித்த நபர், கலகெதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

வத்துயாய, வேவூட பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான மஹேஷ் ரந்திக தேவ்புர என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை சம்பவத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# சுதந்திரதின முத்திரையை வெளியிடுவதில் தாமதம்

சுதந்திர தின ஞாபகார்த்த முத்திரையை வெளியிடுவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 04 ஆம் திகதி கொண்டாடப்பட்ட இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது நிர்வாக அமைச்சின் தலையீட்டின் மூலம் ஞாப கார்த்த முத்திரையொன்றை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

எனினும், இந்த முத்திரையின் முதல் நாள் வெளியீட்டின்போது ஜனாதி பதி என்ற வகையில் மைத்திரிபால சிறிசேன தனது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை என்பவற்றை இட வேண்டியது மரபாகும்.

தேர்தல் பிரசாரங்கள் மற்றும் ஏனைய அலுவல்கள் காரணமாக சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஜனாதிபதியின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்படுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக சுதந்திர தினத்தன்று அந்த முத்திரை வெளியிடப்படவில்லை.

அதன் பின்னரும் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை அடுத்து உருவாகியுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள அதிக வேலைப்பளுவால் ஜனாதிபதி குறித்த முத்திரை வெளியீட்டிற்குத் தனது கையொப்பத்தை இடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக முத்திரை வெளியிடப்படுவதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், முத்திரை சேகரிப்பாளர்கள் இது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ளனர்.

# புதிய தங்கமுவ பாலத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி



கொழும்பு, பெப். 24

வெலிமடை மற்றும் ஊவா பறணகம தேர்தல் தொகுதியை இணைக்கும் வகையில் உமா ஓயா ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய தங்கமுவ பாலத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இதற்கு ஒருகோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம் திறக்கப்பட்ட பின்னர் தமது அறுவடைகளை சந்தைக்குக் கொண்டுசெல்வதற்கான இலகுவான வசதிகள் கிடைக்கும் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# குவைத்தின் 57ஆவது தேசிய தின நிகழ்வு கொழும்பில்!



கொழும்பு, பெப். 24

குவைத்தின் 57 ஆவது தேசிய தின நிகழ்வு அந்த நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாவு தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த நிகழ்வில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

# ரயில்களில் திடீர் பரிசோதனைகள்; சட்ட திட்டங்களை மீறியோர் கைது

ரயில்வேத் திணைக்கள பயணச்சீட்டு பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின் போது, ரயில்வே சட்டதிட்டங்களுக்கு மாற்றமான முறையில் ரயில்களில் பிரயாணம் செய்த பலர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 2 கோடி ரூபாவை அபராதத் தொகையாகத் திரட்ட முடிந்தது என ரயில்வே வாணிப அத்தியட்சகர் ஜீ.டபிள்யூ.சிசிர குமார தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதி வரை கொழும்பு உள்ளிட்ட பல்வேறு ரயில்வே வலயங்களில் 14 ஆயிரத்து 809 சோதனை நடவடிக்கைகள் மேற்



2 கோடி ரூபா அபராதம்

கொள்ளப்பட்டன என்றும், தொடர்ந்தும் இந்த ஆண்டும் திடீர்ப் பரிசோதனைகள் விரிவாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டிக்கட் வாங்காமல் பயணித்தமை, மூன்றாம் வகுப்பு டிக்கட்டுக்களுடன் முதலாம், இரண்டாம் வகுப்புப் பெட்டிகளில் பயணித்தமை, டிக்கட்டில் குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பயணித்தமை போன்ற குற்றங்களுக்காகவே இவர்கள் கைது செய் யப்பட்டு இந்த அபராதத் தொகை பெறப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில்வேத் திணைக்கள வருமானத்தைப் பெருக்கும் நோக்கில், ரயில்வே அபராதத் தொகைகளும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன.

2,500 ரூபாவாக இருந்த அபராதம், 3 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் ரயில்வே வாணிப அத்தியட்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சனசமூக நிலையப் பொதுக் கூட்டம்

வேலணை பெப்.24

வேலணை பள்ளம் புலம் முருகமூர்த்தி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நமை பெறும் என்று செயலாளர் ந.சசிதரன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் புதிய செயற்குழு தெரிவை அடுத்து வேலணைப் பிரதேசசபைச் செயலாளர் அ.குருநாதன், வேலணை பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி புஸ்பராணி பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர் என்று நிலையத் தலைவர் சொ.சிவயோகலிங்கம் தெரிவித்தார். (இ)

## தினசரி ராசி பலன்
(24.02.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 12 ஆம் நாள் சனிக்கிழமை நவமித்திதி இரவு 10.36 மணி வரை பின்னர் தசமி. நட்சத்திரம்: ரோகினி பகல் 11.28 பின்னர் மிருகசீரிடம் அமிர்தசித்த யோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** *- காலை 9.25 மணி முதல் 10.54 மணி வரை*

**சுபநேரம்** *- மாலை 3.25 மணி முதல் 4.56 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மாசி மாத வளர்பிறை நவமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *ரோகினி, மிருகசீரிடம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - ஆக்கபூர்வமான நாள். பணவரவு அதிகரிக்கும். உத்தியோகத்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும். மனைவி வழியில் அனுகூலம் உண்டாகும்.

**ரிஷபம்** - அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தொழிற்பிரிவினருக்கு தொழில் முன்னேற்றமும், வருமானத்தில் திருப்திகரமான போக்கும் காணப்படும். வியாபாரத் தொழிலில் வளர்ச்சி ஏற்படும்.

**மிதுனம்** - அலைச்சல் மிகுந்த நாள். சுயதொழில் புரிவோர் வீதி வீதியாக அலைந்து திரிவார்கள். கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு சிலர் அலைந்து திரிவார்கள். சிலர் படித்து முடித்து விட்டு வேலை தேடுவார்கள்.

**கடகம்** - யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவால் மறைமுக வருமானங்கள் போன்ற சலுகைகள் கிடைக்கும். வீடு, வாகன வசதிகளைப் பெற்று மகிழ்வார்கள்.

**சிம்மம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சுமாராக இருக்கும். கடன் வாங்காமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் சுமாராக நடக்கும். நண்பர்கள் பெருமளவு உதவுவார்கள்.

**கன்னி** - மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். தொழில், வியாபாரத்தில் பெரும் ஆதாயம் கிடைக்கும். அரசு வழியில் எதிர்பார்க்கும் நன்மைகள் விரைவாக அமையும். பெண்களால் நன்மைகள் உண்டாகும்.

**துலாம்** - யோசனையான நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் வீண் வாக்குவதங்கள் உண்டாகும். சுயதொழில் ஆதாயம் குறையும். உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு தொழிலில் பல போட்டிகளும் அவசர முடிவுகள் எடுக்கும் சூழ்நிலையும் உண்டாகும்.

**தனுசு** - இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பல நாள் பட்ட கஷ்டங்கள் தீரும். பெண்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். சிலருக்கு சுய வேலை வாய்ப்பு அமையும்.

**மகரம்** - அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தில் ஜெயம் உண்டாகும். பெண்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவார்கள். முதலீடு இல்லாத தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்** - கவலையான நாள். தனவரவு குறையும். தொழிலில் பல சோதனைகள் உண்டாகும். குடும்ப ஒற்றுமை பாதிக்கப்படும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். நம்பியவர்களே ஏமாற்றுவார்கள்.

**மீனம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தொழில் நிலையில் தேக்க நிலை உண்டாகும். உடல் நிலை பாதிப்படைந்து மருத்துவச் செலவு அதிகரிக்கும்.

**சந்திராட்டமநாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள் , சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# 'லீசிங்' நிலுவை செலுத்தத் தவறியவரின் உடைமைகளை பறிக்க நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், பெப் 24

யாழ்ப்பாணத்திலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் லீசிங் அடிப்படையில் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்து விட்டு நிலு வைக் கொடுப்பனவைச் செலுத் தத் தவறியவரின் உடைமைகளைப் பறிமுதல் செய்ய கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள அந்த நபரின் வீட்டிலுள்ள உடைமைகளைக் கணக்கிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருக்குக் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் எழுத்தாணைக் கட்டளை வழங்கியிருந்தது.

வர்த்தக மேல் நீதிமன்றின் எழுத்தாணைக் கட்டளையை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் திருமதி மீரா வடிவேற்கரசன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நிறைவேற்றினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் லீசிங் அடிப்படையில் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்த நபர், தவணைப் பணத்தைச் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் பின்னரும் நிலுவைப் பணமாக 8 இலட்சம் ரூபாவைச் செலுத்துமாறு நிதி நிறுவனம் அந்த நபரிடம் கோரியுள்ளது. அதற்கான அவகாசத்தை நிதி நிறுவனம் வழங்கியபோதும் அவர் அதனைச் செலுத்தத் தவறினார்.

நிதி நிறுவனத்தால் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் எதிர் மனுதாரரின் சொத்துடைமைகளைப் பறிமுதல் செய்ய நீதிமன்றம் கட்டளை வழங்கியது. அந்தக் கட்டளையை நிறைவேற்றுமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு மன்று பணித்தது.

இந்த நிலையில் எழுத்தாணை மனுதாரரான நிதி நிறுவனம், யாழ்ப்பாணம் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன், எதிர் மனுதாரர் வதியும் இல்லத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர், எழுத்தாணைக் கட்டளையை நிறைவேற்றினார்.

எதிர் மனுதாரரின் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட தளபாடங்கள் கணக்கிடப்பட்டு நிதி நிறுவனத்துக்கு அறிக்கை வழங்கப்பட்டது. அவரிடம் தற்போதுள்ள தளபாடங்களின் பெறுமதி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் நிதி நிறுவனங்களில் லீசிங் மற்றும் கடன் பெறுவோரின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. அதிகரித்த வட்டி மற்றும் வருமான இழப்புக் காரணமாக கடன்களைத் திருப்பிச் செலுத்துவத்தில் பலர் இடர்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் நிதி நிறுவனங்கள் வாடிக்கையாளருக்கு எதிராக கொழும்பு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இத்தாலி தேர்தலில் போட்டியிடும் இலங்கையர்!



இத்தாலியில் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி நடைபெறும் லெம்பார் மாகாணசபைத் தேர்தலில் இலங்கையை சேர்ந்த ஒருவர் அந்த நாட்டின் பிரதான கட்சியின் வேட்பாளராக போட்டியிட உள்ளார்.

நயினாமடு பிரதேசத்தை சேர்ந்த நிரஞ்சன் வாஸ் என்ற இந்த இலங்கையர் இத்தாலியில் குடியுரிமை பெற்று மிலான் நகரில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், இத்தாலியின் பிரதான அரசியல் கட்சியான ஜனநாயக கட்சியின் சார்பில் வேட்பாளராக போட்டியிட உள்ளார்.

இத்தாலியில் உள்ள இலங்கைத் தொழிலாளர்கள், வெளிநாட்டு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமயம் சார்ந்த பொதுச் சேவையில் ஈடுபட்டு வரும் நிரஞ்சன் வாஸ் கடந்த 35 ஆண்டுகளாக மிலான் நகரில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லிணக்கத்திற்கான அலுவலக 'மூவர்' திரைப்படத்தின் முதற்காட்சி!

கொழும்பு, பெப். 24

நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை வெளியீடும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட, பிரசன்ன விதானகே, விமுக்தி ஜயசுந்தர மற்றும் அசோக ஹந்தகமவின் இயக்கத்தில் உருவான 'மூவர்' திரைப்படத்தின் முதற்காட்சி, எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 05.30 மணி தொடக்கம் 07.30 மணிவரை கொழும்பு - 02, ரீகல் திரையரங்கில் இடம்பெறவுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தவிசாளர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் அழைப்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## யூரோவிலில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்24

யாழ் முகாமையாளர் சம்மேளனம் (JMF) "வட மாகாணத்தில் அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்களிப்பும், எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்" பற்றிய கலந்துரையாடல், ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இக்கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை-

**யாழ் பிரதேசத்தில்**- புதூமடம், கோப்பாய் சந்தி, மானிப்பாய் வீதி, கைதடி வடக்கு, இருபாலை சந்தி, இருபாலை பழைய வீதி, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, இலங்கைநாயகி, கல்வியங்காடு சந்தி, ஆடியபாதம் வீதி, நாயன்மார்கட்டு, இராமலிங்கம் வீதி, முடமாவடி கிளிகடை சந்தி, GPS றோட், கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, பலாலி வீதியின் ஒரு பகுதி, தாவடி சந்தி, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி பாடசாலை வீதி, வன்னியசிங்கம் வீதி ஆகிய இடங்களிலும்-

**இன்று மேலதிக மின்தடை**

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக- இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மதியம் 5 மணிவரை-

**யாழ். பிரதேசத்தில்**- சுதந்திரபுரம், குட்டியப்புலம், நவக்கிரி, நிலாவரை, இராசவீதி, சிறுப்பிட்டி மேற்கு, கலைமகள், ஆவரங்கால், வாதரவத்தை, பெரிய பொக்கணை, புத்தூர், ஊறணி, வீரவாணி, ஊர்காவற்றுறை சந்தி, ஊர்காவற்றுறை வைத்தியசாலைப் பிரதேசம், செபஸ்தியார் கோவிலடி, மெலிஞ்சிமுனை, கரம்பன், இருதய ஆண்டவர் கோயிலடி, தம்பாட்டி, ஊர்காவற்றுறை நீதிமன்ற கட்டடத் தொகுதி ஆகிய இடங்களிலும்- மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (இ)

# சிங்களக் கட்சிகளோ அதிகாரத்துக்குப் போட்டி

# பிரச்சினைகளோடு மல்லுக்கட்டும் சிறுபான்மை மக்கள்!

**ஆங்கிலத்தில்** - ANDREAS JOHANSSON
**வழிமூலம்** - Open Democracy
**மொழியாக்கம்** - **நித்தியபாரதி**

இவ்வாண்டு தனது 70வது சுதந்திர தினத்தைக் கொண்டாடிய இனப்பிரப்பிரச்சினை நிலவுகின்ற சிறிலங்காவில், வன்முறைகள் நிறைந்த தேர்தல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பெப்ரவரி 10 அன்று இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சிறிலங்காவின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றது.

இத்தேர்தலில் 75 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றதானது மக்கள் தமது வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காண்பித்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

தற்போதைய அரசாங்கம் புதிய தேர்தல் முறைமைக்கான வன்முறைகளற்ற வாக்களிப்பிற்கு பங்காற்றியுள்ளது.

'முன்னைய தேர்தல்களில் இடம்பெறும் போட்டிமிக்க மற்றும் முரண்பாடான விருப்பு வாக்கு முறைமையானது நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ள புதிய முறைமையில் காணப்படாமையே தற்போது இடம்பெற்ற தேர்தல் மிகவும் அமைதியான தேர்தலாக இடம்பெறுவதற்குக் காரணமாகும்' என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான காரணத்தை விளக்கியுள்ளார்.

புதிய தேர்தல் முறைமை அறிமுகப் படுத்தப்படுவதானது வருகின்ற பொதுத் தேர்தலில் தற்போதைய அரசாங்கத்திற்கு நலன் பயக்கும் என விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

1983 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு யுத்தத்தால் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட சிறிலங்காவில் வன்முறைகளற்ற தேர்தல் இடம்பெற்றமை உண்மையில் வரவேற்கத்தக்கதாகும். எனினும், உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறானது தற்போது ஆட்சியிலுள்ள கட்சிகளுக்கு சாதகமாக காணப்படவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் என்பது நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களைப் போன்ற பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. எனினும் இம்மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முன்னைய ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றமை அவர் மிக விரைவாக மீண்டும் அரசியலில் முன்னிலைக்கு வந்துள்ளார் என்பதையும் அரசியல் அதிகாரத்தை மீளப்பெறுவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

2015 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன 51 சதவீத வாக்குகளைப் பெற்றமையால் ராஜபக்ஷ தோல்வியுற்றார். தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றிக்குத் துணை நின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிசேன 2015 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டார். 2015 தொடக்கம் சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர்.

ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த போது இவர் மீது பல்வேறு ஊழல் மோசடிகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும், சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்ஷ ஒருபோதும் தனது பிரபலத்தை இழக்கவில்லை.

**மீண்டும் மஹிந்த**

ராஜபக்ஷ தனது முன்னைய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறிய பின்னர் புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தார். தற்போது இவர் தனது சகோதரர்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னைய உறுப்பினர்களின் ஆதரவுடன் சிறிலங்கா பொதுஜன முன்னணி என்கின்ற கட்சியின் தலைவராக உள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் ராஜபக்ஷ வெற்றி பெற்றதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் மீது ராஜபக்ஷ பழிக்குப் பழி வாங்கியுள்ளார் என்பதை உணரமுடிகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றதன் பின்னர், தற்போதைய அரசாங்கம் நாடாளுமன்றைக் கலைத்து மீண்டும் தேர்தலை நடத்த வேண்டும் என ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இவரது இந்தப் பின்னணியானது, ராஜபக்ஷ இந்த நாட்டின் அரசியல் தலைவராக மீண்டும் வருவதற்கான தனது விருப்பை ஒருபோதும் கைவிடவில்லை என்பதைக் காண்பிக்கின்றது. அத்துடன் தனது கட்சி ஆதரவாளர்களிடம் வன்முறைகளில் ஈடுபட வேண்டாம் எனவும் 'அவர்கள் எமக்கு என்ன செய்தாலும் பிரச்சினையில்லை, நாங்கள் ஓர் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்' எனவும் ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

பெரும்பான்மை சிங்கள கட்சிகளுக்கு வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறுகள் தெளிவாகச் சுட்டி நிற்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலும் வெற்றி பெற்றுள்ளது.



உள்நாட்டுப் போர் இடம்பெற்ற போது வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களது ஆதரவாளர்களும் செயற்பட்டனர். தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாவிட்டாலும் கூட அவர்களது எண்ணங்கள் இன்றும் வடக்கில் காணப்படுகின்றன.

**தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு**

தமிழ் சமூகம் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுவதாக சித்திரவதைகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் அபகரிக்கப்பட்டு அங்கு குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை மிகப் பெரிய தொரு பிரச்சினையாகக் காணப்படுகிறது.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் நிலங்களை சிறிலங்கா இராணுவத்தினர் அபகரித்துள்ளதுடன் இதில் தமது சொந்த நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளனர். ஆகவே இது முன்னைய அரசாங்கத்தால் ஏற்பட்ட பிரச்சினை எனினும் தமிழ் மக்கள் தற்போதைய சிங்களத் தலைமை மீதும் நம்பிக்கை வைக்க முடியாதவர்களாக உள்ளனர்.

இதேபோன்று முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான நிலங்களும் அபகரிக்கப்பட்டுள்ளன. 2013 இல் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் உரையாடும் போது இதனை நான் உறுதிப்படுத்தினேன். தனது சமூகத்தைப் பொறுத்தளவில் காணி அபகரிப்பு என்பது மிகவும் முக்கியமானதொரு கேள்வியாக உள்ளதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில், அவரது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவின் ஆதரவுடன் இயங்கிய கடும்போக்கு பௌத்த அமைப்பான பொது பல சேனா, முஸ்லிம் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருப்பதுடன், சிறிலங்காவானது பௌத்தர்களுக்கான புனித நிலம் எனவும் பரப்புரை செய்துவருகிறது.

2020 இல் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது. ஆனால் இத்தேர்தலில் தற்போதைய அரசியல் சீர்திருத்தத்தின்படி, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட முடியாது. ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் தான் மக்கள் மத்தியில் எத்தகைய பிரபலத்தையும் ஆதரவையும் கொண்டுள்ளார் என்பதை மஹிந்த ராஜபக்ஷ காண்பித்துள்ளார். ஆகவே இதன்மூலம் மஹிந்தவின் சகோதரர்களில் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவார்.

ஐக்கிய தேசியக் கட்சி சிறிசேனவிற்கான தனது ஆதரவை விலக்கி தனது கட்சி வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தலாம்.

ஆகவே 2020ல் சிறிசேன இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும். பிரதான சிங்களக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு போட்டியிடும் அதேவேளையில் இங்கு வாழும் இரு சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் தத்தமது பிரச்சினைகளுடன் போராடிக் கொண்டிருப்பார்கள். ★

---

# மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகத்திற்கு 'சீல்'!

மன்னார், பெப். 24

மன்னாரில் உள்ள பிரபல வெதுப்பகம் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக நேற்றுமுன்தினம் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.



இதன்போதே இந்த வெதுப்பகத்தில் உடல் நலத்திற்கு ஒவ்வாத வகையில் பொருள்களை களஞ்சியப்படுத்தி இருந்தமை அங்கு கடமையாற்றுபவர்கள் சிலர் தனி நபர் சுகாதாரத்தைக் கடைப்பிடிக்காமை, காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தநிலையில், இந்த வெதுப்பகத்தின் உரிமையாளருக்கு எதிராக நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா குறித்த வெதுப்பகத்தின் உரிமையாளர் குற்றத்தை ஒப்புக் கொண்டமைக்கு அமைவாக 25 ஆயிரம் ரூபா அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் நீதிமன்றத்தின் மறு அறிவித்தல் வரை அந்த வெதுப்பகத்தை 'சீல்' வைத்து மூடுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைவாக இந்த வெதுப்பகம் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

(ப)

# மூளாயில் பொறுப்பற்ற அதிபரும் அல்லாடும் சமூகமும்!

வலிகாமம் கல்வி வலயத்தில் மூளாய் பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் அதிபரின் எதேச்சதிகாரமான செயற்பாட்டால் அப் பாடசாலையைச் சூழவுள்ள கிராமங்கள் கல்வியில் பின்னடைந் துள்ளன எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, மூளாய் வேரம், முன்கோடை, தொல்புரம், மூளாய் பிள்ளையார் கோயிலடி போன்ற ஏற்கனவே பின்தங்கிய – கிராமங்களே இவரால் பாதிக் கப்பட்டுள்ளன என அப்பிரதேச மக்களும் அங்குள்ள சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தெரிவிக்கின்றனர்.

1988.08.17 ஆம் திகதி இப்பாடசாலையில் ஆசிரியையாக நியமனம் பெற்ற இவர் பின்னர் உப அதிபராகக் கடமையாற்றி 2005.04.12 ஆம் திகதி அதிபராக நியமிக்கப்பட்டார். கடந்த முப்பது வருட காலமாக இப்பாடசாலையில் கடமையாற்றுவதால் இவரிடம் சர்வாதிகாரப் போக்குத் தலைதூக்கியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த ஆறு வருடங்களில் மூளாய் வேரம் என்ற கிராமத்தைச் சோந்த 25 மாணவர்களை இவர் விடுகைப் பத்திரங் களை வழங்கிப் பாடசாலையை விட்டுத் துரத்தியிருக்கின்றார். தொல் புரத்தில் கடந்த சில வருடங்களில் ஐந்து மாணவர்களும் முன்கோடை யில் ஐந்திற்கு மேற்பட்ட மாணவர்களும் பிள்ளையார் கோயிலடியில் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் 8 மாணவர்களும் மேற்படி அதி பரால் பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் 10, 11 ஆகிய தரங்களைச் சோந்த இரு மாணவர்கள் துரத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பெற்றோர் அழுது மன்றாடியபோதிலும் அவர்களை மீள இணைத்துக் கொள்ளாமல் வலுக்கட்டாயமாக விடுகைப் பத் திரங்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

மாணவர்களின் தவறுகளைக் காரணம் காட்டி எடுத்த எடுப்பி லேயே அவர்கள் பாடசாலையை விட்டு, பாடசாலை நேரத்தில் துரத் தப்படுகின்றனர். அதிகமான மாணவர்கள் தரம் 10 மற்றும் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்றபோது வெளியேற்றப்பட்டனர். இவர் கள் சிறுவர் தொழிலாளர்களாக மாறி இள வயதில் திருமணம் செய் திருக்கின்றனர். அவர்களில் பலர் மதுபோதைக்கு அடிமையானவர் களாகியிருக்கின்றனர்.

குறித்த அதிபர் தமது மாணவர்களைச் சமூக ரீதியாக வேறுபடுத் திப் பார்க்கின்றார் எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர். இவர் தங்கள் பிரதேசத்தை திட்டமிட்டு கல்வியில் புறக்கணிக்கின்றார் எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இவரால் துரத்தப்பட்டு தற்போது இளைஞர்களாக உள்ளவர்களும் இதே குற்றச்சாட்டையே முன் வைக்கின்றனர். இப்பாடசாலையில் உளவளத் துணை ஆசிரியையாக இந்த அதிபரே கடமையாற்றுகின்றார். மாணவர்களுக்கு உளவளத் துணை வழங்குவதற்குப் பதிலாக அவர்களைக் கடுமையாகத் தண் டிக்கின்றார் எனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் மாணவன் ஒருவனைக் காதைப் பொத்தி அறைந் தமை, மற்றொரு மாணவனைக் கடுமையாகத் தாக்கியமை போன்ற சம்பவங்கள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் வரை சென்றி ருந்தன. அதிபர் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு எச்ச ரிக்கை செய்யப்பட்டார் என அந்த மாணவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

சுகவீனம் மற்றும் அவசிய தேவை கருதி பாடசாலைக்குச் செல் லாத மாணவர்கள் மறுநாள் செல்லும் போது துரத்திவிடப்படுகின் றனர். நியாயப்படுத்தக்கூடிய காரணங்கள் ஏதுமின்றி அவ்வப்போது மாணவிகளும் துரத்தப்படுகின்றனர். இடைநேரத்தில் வீதியில் மாணவிகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களையும் கருத்தில் கொள்ளாமல் தமது பிள்ளைகளை தனிமையாக வீட்டுக்கு அனுப்பும்போது அவர்களுக்கு யார் பாதுகாப்பு என பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பாடசாலையில் நடைபெறும் பெற்றோர் – ஆசிரியர் சங்கக் கூட் டங்களின்போது ஏனையோரின் கருத்துக்கள் கேட்கப்படுவதில்லை எனவும் தான் கூறுபவற்றையே தீர்மானமாகத் திணிக்கின்றார் எனவும் பெற்றோர்கள் கூறுகின்றனர். இதனால் தாங்களும் ஆசிரியர்களும் மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர் எனவும் அவர்கள் தொவிக்கின்றனர்.

கல்வி அதிகாரிகளால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக் கான ஆசிரியைகள் வன்னி போன்ற தூர இடங்களுக்குச் சென்று கல்வி கற்பிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பாலூட்டும் தாய் மார்கள், கர்ப்பவதிகள் போன்ற ஆசிரியைகள்கூட மனிதாபிமானம் இன்றி தூரப் பிரதேசப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இந்த நிலையில், மேற்படி அதிபர் ஒரே பாடசாலையில் தொடர்ச் சியாக முப்பது வருடங்கள் கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கிய வர் யார் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.

இக்கேள்விக்கு, இதுவரை பதவியில் இருந்த சங்கானைக் கோட்டக் கல்வி, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகா ணக் கல்விப் பணிப்பாளர்கள், மத்திய – மாகாணக் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள் பதில் கூறவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச செயலாளர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் போன்றோரும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதேவேளை, மேற்படிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்படி பாடசாலை அதிபரைத் தொடர்புகொண்டு கேட்ட போது அவற்றை அவர் முற்றாக மறுத்தார். தான் உரிய காரணம் இன்றி எந்த மாணவரையும் வெளியேற்றவில்லை என்றார். பொது மக்களின் குற்றச்சாட்டுக்கள் உண்மையற்றவை எனவும் கூறினார்.

தான் உளவளத்துணை ஆசிரியை எனவும் அதற்கேற்பவே மாணவர்களை வழிப்படுத்துகின்றார் எனக் கூறிய அவர், பெற்றோ ரின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. – என்றார்.



உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையில் வறிய மாணவர்கள் 13 பேருக்கு கடந்த தை மாதம் பிறந்த நாள் கொண்டாடிய உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் இலவச பாதணிகள் புத்தகப் பைகளை வழங்கினர். அந்த நிகழ்வின்போது... (இ





‘இனிய நந்தவனம்’ நூல் வெளியீடு அண்மையில் யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் யாழ். பாவாணன் தலைமையில் நடைபெற்றது. இலங்கை, இந்திய எழுத்தாளர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(இ–19)







மூத்த பத்திரிகையாளர் எஸ்.பெருமாளின் ‘யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம்” நூல் வெளியீட்டு நிகழ்வு முன்னாள் துணை வேந்தர் என். சண்முகலிங்கன் தலைமையில் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது இந் நிகழ்வின் பதிவுகள் சில:

(இ–19)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 105

## வேலன் என்றொரு வேழம்!

அண்ணாமலையில் படிக்கும்போது, இளமை துடிக்கும்போது, வேலன் செய்த விளையாட்டுக்களை, வித்துவான் ஆறுமுகமும், சிவராமலிங்கம் மாஸ்ரரும், அடுக்கடுக்காய்ச் சொல்லி ஆனந்திப்பார்கள். ஒரு முறை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில், பேரறிஞரான சிதம்பரநாதச் செட்டியார் உரையாற்றினாராம். ''பொய் பிறந்தது புலவர் நாவிலே!'' இது அன்றைய அவரது பேச்சுத் தலைப்பு. தமிழ்ப் புலவர்களைத் தாழ்த்தும் வண்ணம், அன்று அவர் பேசிய பேச்சில் வேலனுக்கு உடன்பாடாகவில்லை. அடுத்த வார நிகழ்வில், தான் பேசப் போவதாய்க் கேட்டு, சந்தர்ப்பம் பெற்று, செட்டியார் பேசிய அதே தலைப்பில் பேசியிருக்கிறார்.

ஒரு சிறு மாற்றம், ''பொய் பிறந்தது புலவர் நாவிலே?'' என, ஏகாரத்திற்கு வினாப்பொருள் கொடுத்து, புலவர்தம் நாவிலே பொய்யும் பிறக்குமோ? எனக் கேள்வி எழுப்பி, செட்டியாரது முன்னைய பேச்சைக் கடுமையாய்ச் சாடியிருக்கிறார். உடன்கற்ற வித்துவான் ஆறுமுகம் நடுங்கிப் போனாராம். இறுதி வருடப் பரீட்சையில் இருந்து கொண்டு இப்படிப் பேசினால், பரீட்சை முடிவு பாழ்பட்டு விடுமே! எனும் பதற்றம் அவருக்கு. மாணவர்களின் கல்வித்தரம் பற்றிய கவலையில்லாமல், பேராசிரியர்கள் தாம் வெறுப்பவர்களை வீழ்த்தும் பண்பாடு (?), பல்கலைக்கழகங்களில் இயல்பாய் அங்கும் இருந்திருக்கிறது. வேலனை அழைத்துச்சென்று, பேராசிரியரோடு பேசிச் சமன் செய்தாராம் வித்துவான் ஆறுமுகம். இது, வேலனின் துடுக்கின் அடையாளமல்ல, மிடுக்கின் அடையாளம்.

* * *

மற்றொரு சம்பவம். இது சிவராமலிங்கம் மாஸ்ரரின் தம்பியாரான புலவர் ஈழத்துச் சிவானந்தன் சொன்னது. அவரும் அப்போது அண்ணாமலையில் படிக்கச் சேர்ந்திருந்தார். எங்கள் வேலன் மாஸ்ரர் ஆறடி உயர ஆஜானுபாவர். முதுமையிலேயே, அவர் நிமிர்ந்த தோற்றம் எங்களை வியப்புறுத்தும். இளமை நிலையைக் கேட்கவும் வேண்டுமா? முழுகுவதற்காய் உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை எண்ணெய் வைத்துக்கொண்டு, இடையில் ஒரு சிறு துண்டு மட்டும் கட்டி வெய்யிலில் நிற்பாராம் வேலன். இது சனியில் நிதம் நடக்கும் தனிக்காட்சி. இயல்பாகவே, மென்மை கொண்ட மற்றைய தமிழ் மாணவர்கள், ''நின்ற நிலையிது நெறியிற்றன்று'' என நெளிய, புலவர் மற்றவர்கள் சார்பாய்ப் போய், ''அண்ணே! மற்றவையள் சங்கடப்படுகினம், பெண் பிள்ளைகள் வந்து போற இடம், நீங்கள் உள்ள வாங்கோ!'' என்று கூப்பிட்டிருக்கிறார். ''டேய் சிவானந்தன், என்ர உடம்பு, என்ர எண்ணெய், நான் பூசிக் கொண்டு நிண்டால் அவங்களுக்கு என்ன செய்யுது? ஆரது உன்னை அனுப்பினது'' என்று வேலன் கையைக் காலை உதற, தப்பினால் காணுமென்று தான் ஓடி வந்த கதையைப் புலவர் சொல்ல, நாம் கேட்டு விழுந்து விழுந்து சிரித்திருக்கிறோம்.

* * *

மற்றொரு கதை. இதுவும் புலவர் சொன்னது தான். அப்போதெல்லாம் சனிக்கிழமைகளில், அண்ணாமலை 'ஹொஸ்ரல்' சாப்பாட்டில் கோழிக்கறி போடுவார்களாம். சுப்பையா என்ற சமையற்காரன்தான் உணவு பரிமாறுவானாம். கோழிக்கறி போடும் பொழுது, அவசர அவசரமாக வைப்பது போல் எல்லாரது இலையிலும், கடகடவென, கறியைக் கொஞ்சம் கொஞ்சமாய் வைத்தபடி, அவன் நகர, பரிதாபமாய் அக்கறியைப் பார்த்தபடி ஒன்றும் செய்ய முடியாமல் மாணவர்கள் உண்பது வழக்கமாய் இருந்திருக்கிறது. அதிக கறி கேட்டால், உள்ளதும் குறைந்து



விடுமோ எனும் பயத்தில், பயில்வான் போலிருந்த சுப்பையாவிற்கு எதிராக, புரட்சி கிளப்ப எவரும் துணியாத நிலையிற்தான் வேலன் மாஸ்ரர் ''ஹொஸ்ரலில்' இணைந்திருக்கிறார். வழமைபோல, அந்தச் சனிக்கிழமையும், சுப்பையா வேக வேகமாகக் கறியை வைத்து வேலனைத் தாண்டி நகர்ந்திருக்கிறான். ''டேய் சுப்பையா, இங்க வாடா!'' என்று, அவனை மிரட்டிக் கூப்பிட்டிருக்கிறார் வேலன்.இவரது தோற்றத்திலும் கர்ச்சனையிலும் இருந்த கம்பீரம் கண்டு, பயந்து நடுங்கிய சுப்பையா, ''என்ன சார், என்ன சார்'' என்று தயங்கி நின்றிருக்கிறான். சுப்பையாவின் நடுக்கம் கண்டு மாணவர்களுக்கு அளவிறந்த உற்சாகம். எல்லோரும் வேலனை விநோதமாய்ப் பார்க்க, அவர், அது பற்றிய கவலையில்லாமல், ''டேய், இங்க கிட்டடியில வாடா!'' என்று மீண்டும் சுப்பையாவை மிரட்டி அழைத்திருக்கிறார். பயந்து பயந்து அருகில் வந்த சுப்பையாவிடம் தனது இலையில் கொஞ்சமாய் விழுந்திருந்த கோழிக்கறியைக் காட்டி, ''என்னடா இது?'' என்று வேலன் கேட்க, அவன், இவர் ஏதோ குதர்க்கம் செய்கிறார் என்பதை விளங்கி, பயந்து நடுங்கியபடி, ''கோழிக்கறி சார்'' என்றிருக்கிறான். குரலை மேலும் உயர்த்திய வேலன், ''டேய், எங்கட ஊரில ஊறுகாய் தான் இந்தளவு வைக்கிறவங்கள். வையடா கறியை'' என்று மிரட்ட, அன்றில் இருந்து அடுத்தவர் இலைகளிலிடும் அரைக்கரண்டிக் கறி, வேலன் இலையில் மட்டும் ஐந்து கரண்டியாய் உயர்ந்திருக்கிறது. வேண்டியதைக் கேட்பதில் இது தான் வேலனின் பாணி. இக்கதையைப் புலவர் சொல்லும் அழகே அழகு!

* * *

வேலன் மாஸ்ரரது கல்யாணம் காதற் கல்யாணம். உயரத்தைத் தவிர அவர் இயல்புக்கு எல்லாவிதத்திலும் பொருத்தமான மனைவி. மாஸ்ரரைக் கடைசிவரை காதலாய் நேசித்தார். மாஸ்ரரின் முரட்டுத்தனங்களுக்கெல்லாம் முகஞ்சுழிக்காமல் இடங் கொடுத்தார். திருமணமான பிறகு, மனைவியை இலங்கையில் விட்டு மீண்டும் தான் இந்தியா சென்று, B.O.L. பரீட்சையை முடித்து வந்தார் மாஸ்ரர். ஒரு பெண் குழந்தை பிறக்க, அந்தக் குழந்தையைத் தன்னோடு 'ஹொஸ்ரலில்' வைத்துக் கொண்டு, ரீச்சரை இந்தியா அனுப்பிப் படிக்க வைத்தார். பின் இரு வருமாக, வளர்ந்த மகளை இந்தியா அனுப்பிப் படிப்பித்தார்கள். அதன் பிறகு, பேரப் பிள்ளையைத் தானே கொண்டு சென்று இந்தியாவில் வைத்துப் படிப்பித்தார். மாஸ்ரரின் கல்விப் பைத்தியம் அந்தளவானது.

* * *

'யதார்த்தவாதி வெகுசன விரோதி' எனும் பழமொழிக்கிணங்க, போகுமிடமெல்லாம் வேலன் பகை சம்பாதித்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்பிக்கும் காலத்தில், அதிபராக இருந்தவருக்கு, வேலனைப் பிடிக்கவே பிடிக்காது. வேலனது நிமிர்வும் பணியாத் தன்மையும் எரிச்சலூட்ட, வேண்டுமென்றே வேலனைச் சீண்ட நினைத்திருக்கிறார் அவர். ஒருநாள் ஆசிரியர்களுக்கான பாடம் ஒதுக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், வேண்டுமென்றே வேலனைத் தாமதிக்க வைத்து, மற்றைய பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமித்திருக்கிறார் அவர். சினத்தை அடக்கியபடி வேலன் பொறுத்திருக்க, அந்த நேரம் பார்த்து மற்றோர் ஆசிரியர் 'சேர், தமிழுக்கு ஒருத்தரையும் போடேலயே...'' என்று இழுத்திருக்கிறார். வேலனைக் கிண்டலடிக்க நினைத்த அந்த அதிபர், தமிழ்தானே, அது பிரச்சினையில்லை, ''எனிபொடிகான் ரீச் ரமில்'' என்றிருக்கிறார். எரிமலை வெடித்திருக்கிறது. கொதித்தெழுந்த வேலன், 'ஸ்ராப் ரூம்' என்றும் பாராமல், அத்தனை ஆசிரியர்களுக்கும் முன்னால், கழுத்தைச் சுற்றி அதிபர் போட்டிருந்த, சால்வையின் இரு முனைகளையும் பற்றிப்பிடித்து, ''எனிபொடிகான் ரீச் ரமிலோடா? எங்க 'அ' வில் இருந்து 'ன்' வரையும், தமிழெழுத்து முழுவதையும் வரிசையாய்ச் சொல்லு பார்ப்பம்'' அதிபரை உலுப்பியபடி கேட்க, அருகிலிருந்த ஆசிரியர்கள், அதிபரைப் பெரும்பாடு பட்டு மீட்டெடுத்திருக்கிறார்கள்.

* * *

(தொடரும்...)

# உர நிவாரணம் தொடர்பில் அரசின் புதிய கொள்கை

கொழும்பு, பெப். 24

உர நிவாரணம் தொடர்பிலான புதிய கொள்கையை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அரசு பரிசீலனை செய்கின்றது.

இதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கவனம் செலுத்தப்படும். தேசிய பொருளாதார பேரவையின் கூட்டத்தில் இது தொடர்பில் ஆராயப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் முதல் தடவையாக பேரவை கூடியது.

உரத்திற்குப் பதிலாக நிதி உதவி வழங்குவதில் மாற்றங்களை கொண்டு வருவது பற்றியும், உரத்தட்டுப்பாட்டை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

உரத் தேவை சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், விளைநிலங்கள் மாசடைவதைத் தடுப்பதற்கான வேலைத்திட்டத்தையும் வகுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மேலதிகமாக உரத்தைக் களஞ்சியப்படுத்தி வைப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. க்ளைபோசெட் மீதான தடைபற்றி



ஜனாதிபதி தலைமையில் பரிசீலனை

பல்வேறு யோசனைகள் முன்மொழியப்பட்டன.

இந்த இரசாயனம் தொடர்பான சட்டங்களைதிருத்தியமைத்து புதியகொள்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் இடர்களைக் களைவது பற்றி கவனம் செலுத்தப்பட்டது.

வாழ்க்கைச்செலவைக்கட்டுப்படுத்துவது பற்றியும் தேசிய பொருளாதார பேரவையில்ஆராயப்பட்டது. உணவுப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி யோசனை கூறப்பட்டது.

குறிப்பாக அரிசி, தேங்காய் போன்றவற்றின் விலைகளை குறைப்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய பொருளாதாரப் பேரவை, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை, மத்திய வங்கி முதலான நிறுவனங்களுடன் சேர்ந்து துரித யோசனைத் தொடரை சமர்ப்பிப்பதன் மூலம் உணவுப் பொருள் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான யோசனை இதன்போது முன்மொழியப்பட்டது.

தேசிய பொருளாதார சபையால் எதிர்வரும் சில வாரங்களுக்குள் மேற்குறித்த பிரச்சினைகள் தொடர்பாகவும் இலங்கையின் ஏனைய பொருளாதார விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்ட கால பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம், ஜோன் செனவிரத்ன, சஜித் பிரேமதாச, துமிந்த திசாநாயக்க, பைசர் முஸ்தபா, மஹிந்த அமரவீர, மலிக் சமரவிக்கிரம, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் தேசிய பொருளாதார சபையின் உறுப்பினர்களான ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர் மற்றும் அதன் பொருளாதார விசேட நிபுணர் பேராசிரியர் லலித் சமரக்கோன் ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கு பற்றினர்.

(க)

## கடும் வெப்பமான காலநிலை காரணமாக கண் சார்ந்த நோய்கள் ஏற்படும் ஆபத்து

கொழும்பு, பெப். 24

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பத்துடனான காலநிலை காரணமாக கண் பார்வை குறைப்பாடு மற்றும் கண்சார்ந்த நோய்கள் ஏற்படக்கூடும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கண் தொடர்பான விசேட நிபுணர்கள் இது தொடர்பான அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

சூரியன் உச்சம் பெற்றுள்ளமையே இதற்கான காரணம் எனவும் கண் தொடர்பான விசேட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார், கண்டி, புத்தளம், குருநாகல், பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய 6 மாவட்டங்கள் வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்படுகின்றது.

## அமெரிக்க சர்வதேச கற்பித்தல் சிறப்பு சாதனை பயிற்சிப்பட்டறையில் இலங்கைப் பெண் பிரபாஜினி

கொழும்பு, பெப். 24

அமெரிக்காவின் சர்வதேச கற்பித்தல் சிறப்பு சாதனை பயிற்சிப்பட்டறையில் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் கலந்து கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள ஒகியோ பௌலிங் கிறீன் பல்கலைக்கழகத்தில் இந்த பயிற்சி பட்டறை கடந்த ஜனவரி 23ஆம் திகதி ஆரம் பமானது. எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியை செல்வி





சாமித்தம்பி பிரபாஜினி என்ற ஆசிரியரே இதில் கலந்துகொண்டுள்ளார்.

இலங்கையிலிருந்து ஒரேயொரு பிரதிநிதியாக இவர் கலந்துகொண்டுள்ளமை சிறப்பம்சமாகும். இவர் காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

கல்வியில் பால்நிலை சமத்துவம் தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு கலப்பு கலாசாரம் என்ற தொனிப்பொருளில் இந்த பயிற்சிப்பட்டறை நடைபெறுகின்றது.

21 நாடுகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 10 தங்க பிஸ்கட்டுகளுடன் இந்திய பிரஜைகள் மூவர் கைது!



கொழும்பு, பெப். 24

இந்தியாவில் வர்த்தக உதவியாளர்களாக பணியாற்றும் மூன்று இந்தியப் பிரஜைகள் 55 லட்சம் ரூபா பெறுமதியுடைய 10 தங்க பிஸ்கட்டுகளுடன் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 24

இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு மூலம் தெரிவான பெண்களின் எண்ணிக்கை 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

பெண்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையைகுறைக்கும் எண்ணம் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக் குழு மற்றும் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தலின் மூலம் 535 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இதில் 1.9 வீதத்திலிருந்து 10 சதவீதம் வரை அதிகரித்திருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்த வகையில், கொழும்பு 54, கம்பஹா 28, களுத்துறை 33, கண்டி 28, மாத்தளை 18, நுவரெலியா 26, காலி 32, மாத்தறை 27, அம்பாந்தோட்டை 16, யாழ்ப்பாணம் 21, கிளிநொச்சி 4, மன்னார் 3, வவுனியா 4, முல்லைத்தீவு 4, மட்டக்களப்பு 8, அம்பாறை 26, திருகோணமலை 7, குருநாகல் 45, அநுராதபுரம் 31, பொலநறுவை 9, பதுளை 24, மொனறாகலை 13, இரத்தினபுரி 32, கேகாலை 26, மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 16 பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## நெடுந்தீவு இறங்குத்துறையின் இரண்டாம் கட்டப் பணிகள் பூர்த்தி



யாழ்ப்பாணம், பெப். 24

வடக்கு கடற்படை நிறைவேற்றுப்பிரிவின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தீவு இறங்குதுறையின் இரண்டாம் கட்டப் பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கடற்படையை சேர்ந்த உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் முதலாம் கட்டப் பணி வெற்றிகரமாக முடிந்ததைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் பணி கடற்படையின் முழு ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்ததிட்டத்திற்கு சிறைச்சாலை மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள் குடியமர்வு மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு நிதி வழங்கியது.

இந்த இறங்குதுறையில் 2 மீற்றர் தூரப் பிரதேசம் ஆழத்தை கொண்டுள்ளதுடன் றோலர் வள் எங்கள் நோயாளிகளுக்கான Sea Ambulance மற்றும் பயணிகளுக்கான போக்குவரத்து சாதனங்களை இலகுவாக நங்குரம் செய்யக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வினாத்தாள் 15 பகுதி II இன் தொடர்ச்சி...

## புலமைப்பாசில் மாதிரிவினாத்தாள் – 14 விடைகள் (பகுதி 01)

1. 2
2. 2
3. 3
4. 2
5. 1
6. 2
7. 1
8. 247
9. 2
10. 2
11. 2
12. 3
13. உடல்
14. ஈருருளி
15. 2
16. 3
17. A
18. B
19. B
20. AB
21. 3
22. 1
23. 2
24. 2
25. 3
26. 3
27. 2
28. 3
29. 3
30. 2
31. 1
32. 2
33. 2
34. 2
35. 2
36. 2
37. 10
38. 3
39. 3
40. 3

## புலமைப்பாசில் மாதிரிவினாத்தாள் – 14 விடைகள் (பகுதி 02)

1) 1.அரை
   2. அரைவாசி
   3. மெதுவாக
   4. மெதுவாக
   5. மூடியினால் இறுக்கி மூடினர்
   6. கடல் அலைபோல

2) சத்தியாகிரகம்
3) அஹிம்சை
4) சகபாடிகள்
5) பாரபட்சம்
6) முடிசூட்டுவிழா
7) 1. புயன்தெரிவார்
2.தொழுதுண்டு
8) 1.உடன்பிறந்தார்போல்
   2.நல்லன எண்ணல் வேண்டும்

9) 1.இரண்டு
   2.பத்து
10) 1.அவைஎவை?
   2.உங்களுடைய விருப்பம் என்ன?
11) Are
12) These
13) ஓயாகே வயச கியத?
14) பட்டம் ஒன்றுகட்டித் தாருங்கள்.
15) பொருத்தமானவாக்கியங்கள் மூன்று
16) 1.12750 ml
   2.2 l 40 cm
17) 1.2
   2.இரண்டு
18) 1.1346
   2.ஆயிரத்து முன்னூற்றுநாற்பத்தாறு
19) 1. 596+278 = 874
   2. 963 என்ற இலக்கம்
2963எனதவறுதலாகஅச்சிடப்பட்டுள்ளது.
   ஆகவே விடை 596+367 = 936
20) 14
21) 9 cm
22) 4098,4099,4100
23) 3/6
24) 8சதுரங்கள்
25) வடகிழக்கு
26) 375 ml
27) ஆ
28) 08:10
29) 40
30) 1.ரூபாய் 175.00
   2.ரூபாய் 60.00
   3.ரூபாய் 35.00
   4.ரூபாய் 105.00
31) 3
32) 2
33) 1
34) 2
35) 1
36) 3
37) 3
38) 2
39) 3
40) 2
41) 3
42) 3
43) 1
44) 1
45) 2
46) 1
47) 3
48) 1
49) 1
50) 1
51) 3
52) 2
53) 3
54) 2
55) 1
56) 3
57. 2
58) 1
59) 2
60) 2



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 15


தரம்-5

பகுதி – II

நேரம்– 1 மணித்தியாலயம் 15 நிமிடம்

வினாத்தாள் 15 பகுதி II இன் தொடர்ச்சி...


31 இத்தையல் முறைக்கு வழங்கும் பெயர்?



1. சங்கிலித் தையல்
2. நரம்புத்தையல்
3. கம்பளித் தையல்
4.பூத்தையல்


32. மூல வர்ணங்கள் என அழைக்கப்படுவன?
1) சிவப்பு, நீலம், பச்சை
2) மஞ்சள் ,நீலம் ,வெள்ளை
3) சிவப்பு, நீலம், மஞ்சள்
4) மஞ்சள், நீலம், பச்சை

33. இலங்கைப்படத்தில் A,Bஇனால் குறித்துக் காட்டப்படும் தரைத்தோற்ற உறுப்புக்கள் முறையே?




1) தாழ்பிரதேசம் ,மலைப் பிரதேசம்
2) மலைப் பிரதேசம், வயற்பிரதேசம்
3) பிரதான ஆறுகள், மலைகள்
4) இடங்கள், எல்லைகள்

34. காந்தம் பல்வேறு வடிவங்களில் காணப்படுகின்றது. இக்காந்தத்தின் பெயர் என்ன?



1. வட்டக் காந்தம்
2. பரிலாடக் காந்தம்
3. U வடிவக் காந்தம்
4. சட்டக் காந்தம்

35. இலங்கைக்கேயுரித்தான பறவை எது?
1. மயில்
2. கிவி
3. காட்டுச்செண்பகம்
4. கழுகு

36. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளர்வது?
1) நாகணவாய்
2) வௌவால்
3) கிவி
4) இரட்டைவாற் குருவி

37. மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மிகவும் பாதுகாப்பாக இருக்கும் முறை?
(1) மரத்தின் நிழலில் நிற்றல்
(2) சமவெளியான இடத்தை நோக்கி ஓடுதல்
(3) வீட்டில் கதிரைமீது இருத்தல்
(4) உயரமான இடத்தில் ஏறி நிற்றல்

38. சூரியனுக்கு மிக அண்மையில் இருக்கும் கோள் எது?
1) பூமி
2) புதன்
3) செவ்வாய்
4) வியாழன்

## வினாத்தாள் 15 பகுதி II இன் தொடர்ச்சி...

39. காந்தத்தினைக் கிட்டக் கொண்டு வரும்போது காந்தத்தினால் கவரப்படாத பொருள் எது?
   1) இரும்பு ஆணி  2) தகரப்பேணி  3) குண்டூசி  4) பித்தளை

40. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடாக இருப்பது,
   1) அரசமிலை  2) சூரியன்  3) மயில்  4) காட்டுக்கோழி

41. இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி எது?
   1) தியலும  2) துன்கிந்த  3) பம்பரகந்த  4) அபர்டீன்


42. "வானம் என்னும் திரையிலே – நீல
   வண்ணம் அடித்தோர் ஆராமோ? ....." எனும் பாடலைப் பாடியவர்?
   1) அழ.வள்ளியப்பா  2) அப்துல் காதர்
   3) கவிஞர் வாகரை வாணன்  4) தேசிகவிநாயகம்பிள்ளை

43. கார்த்திகை, வேட்டைக்காரன் பெருங்கரடி ஆகிய பெரிய உடுக்கோலங்களைக் காணக்கூடிய மாதங்கள்?
   1) மாசி, பங்குனி  2) மாசி, வைகாசி

44. சந்தையில் பொதி செய்யப்பட்ட பொருள்களை வாங்கும்போது நீங்கள் முதலில் கவனத்தில் கொள்ளவேண்டியது எது?
   1) காலாவதித் திகதி  2) பொதி செய்த திகதி  3) உற்பத்தித் திகதி  4) விற்கப்படும் திகதி

45. தரமற்ற தேயிலையைத் தண்ணீரில் இட்டால் தோன்றும் நிறம்?
   1) கபிலம்  2) மண்ணிறம்  3) இளங்கபிலம்  4) இளம் மஞ்சள்

46. மின்காந்தத் தொழிற்பாட்டில் அதிகமான குண்டூசியைக் கவரக் கூடிய உரு எது?
   1)  2)  3)  4)



47. தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்?
   1) அழகூட்டல்  2) நறுமணத்தைப் பரப்பல்
   3) இனத்தைப் பரப்ப உதவுதல்  4) தாவரத்தின் ஆயுட் காலத்தைக் கூட்டல்.

48. கண்டக் கழலை நோய்க்கு மிகப் பிரதான காரணம் யாது?
   1) கல்சியக் குறைபாடு  2) விற்றமின் A குறைபாடு
   3) அயடீன் குறைபாடு  4) இரும்புச் சத்துக் குறைபாடு.

49. இலங்கை மின்சார சபை என்பதைக் குறிக்கப்பயன்படும் குறியீடு எது?
   1)  2)  3)  4)



## வினாத்தாள் 15 பகுதி II இன் தொடர்ச்சி...

50. வடமேல் மாகாணத்தினுள் அடங்கும் மாவட்டம் யாது?
   1) குருநாகல்  2) பதுளை  3) அநுராதபுரம்  4) அம்பாந்தோட்டை

51. அவுஸ்ரேலியாவின் தேசிய சின்னம்?
   1) பண்டா  2) கங்காரு  3) கிவி  4) மயில்

52. பின்வரும் விளையாட்டுக்களில் கவட்டு நிகழ்ச்சி அல்லாதது எது?
   1) சட்டவேலி  2) 75மீற்றர் ஓட்டம்  3) நீளம்பாய்தல்  4) அஞ்சலோட்டம்

53. புரதச்சத்து அதிகமாகவுள்ள தாவரவுணவு
   1) மரவள்ளிக் கிழங்கு  2) மீன்  3) வல்லாரை  4) சோயா அவரை

54. பூச்சியொன்றின் மிகப் பெரிய உடற்பாகம்?
   1) கால்  2) தலை  3) வயிறு  4) நெஞ்சு

55. மணல் மண்ணில் காணக்கூடிய இயல்புகளில் ஒன்று எது?
   1) பயிர்ச்செய்கைக்கு உகந்தது.  2) போசணைப் பொருள்கள் அடங்கியது.
   3) நீரைத்தேக்கும் இயல்புடையது.  4) காற்றிடைவெளி கூடியது.

56. ஒரிகாமி ஆக்கம் என்பது?
   1) கோடுகள் மூலம் வரையப்படும் ஆக்கம்.  2) கடதாசியைக்கரைத்துச் செய்யப்படும் ஆக்கம்.
   3) வித்துக்களைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கம்.  4) கடதாசியை மடித்துச்செய்யப்படும் ஆக்கம்.

57. படத்தில் காணப்படும் பறவை எது?




   1. காகம்
   2. பருந்து
   3. நீர்க்காகம்
   4. மரங்கொத்தி

58. எரிந்துகொண்டிருக்கும் நெருப்பினுள் காய்ந்த உப்புக்கட்டி ஒன்றை இடும்போது நடைபெறுவது யாது?
   1) உப்புக்கட்டி உருகும்  2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடிக்கும்.
   3) உப்புக்கட்டி நன்கு எரியும்  4) தீ அணைந்துபோகும்.

59. தொற்று நோய் (பிரதேசம் பூராகவும்) பரவும் போது உடனடியாக எவருக்கு அறிவிக்கவேண்டும்?
   1) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு  2) மருத்துவமனை அதிகாரிக்கு
   3) பாடசாலை அதிபருக்கு  4) பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு

60. பாலைக்கு ஏற்றதாம். பாலும் தருமாம். நீரைச் சேமிக்குமாம்



30 (புள்ளிகள்)

# சிரியாவில் படையினரின் தாக்குதலில் ஐந்து நாள்களில் 400 பேர் உயிரிழப்பு





சிரியா நாட்டில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசுப் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதலுக்கு கடந்த 5 நாள்களில் 400 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர் எனப் போர் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அரசு ஆதரவுப்படையினர் இதுவரை இல்லாத அளவுக்கு ஆவேச தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த 2013ஆம் ஆண்டுக்கு பிறகு இப்படி ஓர் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உளவு அமைப்பு ஆயுத உதவிகளை நிறுத்தியதால் கிளர்ச்சியாளர்கள் பல இடங்களில் வீழ்ந்து வருகின்றனர்.

இந்தச் சூழலைச் சாதகமாகக் கொண்டு விரைவில்போராளிகளைஅழிக்கும் நோக்கில் அரசுத்தரப்பு கூட்டுப் படையினர் கிழக்கு

## கொல்லப்பட்டவர்களில் 95 பேர் குழந்தைகள்

கூத்தா பகுதிகளில் ஓயாது வான் தாக்குதல்களைநடத்திவருகின்றனர். இதில், சிக்கி கடந்த 48 மணி நேரத்தில் 250இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர் எனப் போர் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் நேற்று இதுதொடர்பாக போர் மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள மேலும் ஓர் அறிக்கையில் –

கடந்த ஐந்து தினங்களாக அரசு படையினர் நடத்திய தாக்குதலில் சிக்கி இதுவரை 403 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் 95 குழந்தைகளும் அடங்குவர் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு சிரியாவில் ரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர். இந்த ரசாயனத் தாக்குதலை நடத்தியது கிளர்ச்சியாளர்கள் என்றும் அரசுப்படைகள் என்றும் மாறி மாறிக் குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்காவில் விளையாடிய பெண்களினால் சர்ச்சை



ரியாத்,பெப்.24

சவுதி அரேபியா மக்கா மசூதி வளாகத்தில் இஸ்லாமியப் பெண்கள் விளையாடியமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்லாமியர்களின் புனித ஸ்தலமாக விளங்குவது மக்கா, உலகில் உள்ள அனைத்து இஸ்லாமியர்களும், புனிதப் பயணம் மேற்கொள்வது வழக்கம். இந்த மசூதி வளாகத்தில் பர்தா அணிந்திருந்த நான்கு பெண்கள், விளையாடுவது போன்ற புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகின. இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதோடு, பலரும் இதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக சவுதி அரேபிய அரசு அளித்துள்ள விளக்கத்தில்,

கடந்த வாரம் இரவு 11 மணியளவில், இந்தப் பெண்கள் மசூதி வளாகத்துக்குள், Sequence எனும் விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தனர். இதனைக் கண்ட மசூதி பாதுகாவலர்கள் அப்பெண்களிடம் விசாரித்துள்ளனர். அத்துடன், புனிதமான இந்த வளாகத்துக்குள் இப்படி விளையாடக் கூடாது என்று அறிவுரை கூறியதைத் தொடர்ந்து, அவர்கள் சென்றுவிட்டனர் எனத் தெரிவித்துள்ளது.

# முட்டையிடும் அதிசயச் சிறுவன்!



இந்தோனேசியாவில் கோழி போல் முட்டையிடும் அதிசயச் சிறுவனை மருத்துவர்கள் நம்ப முடியாமல் தவிக்கிறார்கள்.

இந்தோனேசியாவில் சிறுவன் ஒருவன் கடந்த இரண்டு ஆண்டுகளாக 20 முட்டைகள் இட்டுள்ள சம்பவம் மருத்துவர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தோனேசியாவின் குவாபகுதியைச் சேர்ந்தவன் அக்மல். 14 வயதுடைய இவன் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் முட்டையிட்டு வருகிறான் எனப் பெற்றோர்கள் கூறிவருகின்றனர். இது தொடர்பாக இச் சிறுவனின் தந்தை கூறுகையில்,

அக்மல் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து முட்டையிட்டு வருகிறான், இது தொடர்பாக நாங்கள் பலமுறை மருத்துவமனைக்குச் சென்றுள்ளோம்.

தற்போது கூட மருத்துவமனைக்கு வந்த பின் அவன் இரண்டு முட்டைகள் இட்டான். கடந்த இரண்டு ஆண்டுகளில் 20 முட்டைகளை இட்டிருக்கிறான், அதை தான் உடைத்துப் பார்த்த போது மஞ்சள் நிறத்தில் இருப்பதாக கூறினார், மாணவன் தொடர்பான எக்ஸ்ரே புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார்.

ஆனால் மருத்துவர்களோ இது நிச்சயமாக இருக்க முடியாது, மனிதன் உடலில் முட்டை இருப்பதற்கு வாய்ப்பே இல்லை, மருத்துவமனையில் முட்டை இட்டதாகக் கூறுகின்றனர். நாங்கள் அதை நேரடியாகப் பார்க்கவே இல்லை என்று கூறுகின்றனர்.

# குளிர் கால ஒலிம்பிக் போட்டி நிறைவு விழாவில் இவாங்கா



நியூயோர்க்,பெப்.24

குளிர் கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மகள் இவாங்கா ட்ரம்ப் பங்கேற்கவுள்ளார்.

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் நடந்து வருகிறது. குளிர் கால ஒலிம்பிக் போட்டி தொடரில் வடகொரியாவும் கலந்து கொண்டது. குளிர் கால ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப விழாவில், வடகொரியா அதிபரின் சகோதரி ஜிம் யோ ஜோங் கலந்து கொண்டார்.

ஏறக்குறைய இரண்டு வார காலம் நடைபெற்ற இந்த குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் இந்த வார இறுதியில் முடிவு பெறுகின்றன.

குளிர் கால ஒலிம்பிக் போட்டியின் நிறைவு விழாவில், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மகள் இவாங்கா ட்ரம்ப், உயரதிகாரிகளுடன் பங்கேற்கவுள்ளார்.

இது தொடர்பாக இவாங்கா ட்ரம்ப் கூறியதாவது,

பியோங்சாங்கில் நடைபெற்று வரும் 2018 ஆம் ஆண்டிற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் அமெரிக்க அதிகாரிகளுக்குத் தலைமை ஏற்றுக் கலந்து கொள்கிறேன்.

ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவில் பங்கேற்பது பெருமையாகக் கருதுகிறேன். அமெரிக்க விளையாட்டு வீரர்களை வாழ்த்துவதற்கும், அவர்களது சாதனைகளை கொண்டாடுவதற்கும் நான் காத்திருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

### கடும் பனிமூட்டம் காரணமாக

# சீனாவில் போக்குவரத்து நெரிசல்; ஸ்தம்பித்தன 11 ஆயிரம் வாகனங்கள்



கடும் பனி மூட்டம் காரணமாக கப்பல் போக்குவரத்துத் தடைபட்டதால் சீனாவின் ஹைனான் மாகாணத்திற்கு செல்ல வேண்டிய வாகனங்கள் மொத்தமும் ஸ்தம்பித்துள்ளன.

சீனாவில் ஏற்பட்டுள்ள கடும் பனிப்பொழிவால் அங்குள்ள பொதுமக்களின் இயல்பு நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று கடும் பனி மூட்டம் காரணமாக ஹைனான் பகுதிக்கு செல்ல வேண்டிய கப்பல் போக்குவரத்தை ரத்து செய்துள்ளனர். இதனால் ஹைனான் தீவுக்கு செல்ல வேண்டிய சுமார் 11ஆயிரம் வாகனங்கள் வீதியில் நிறுத்தப்பட்டு பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது மட்டுமின்றி சுமார் ஒரு லட்சம் மக்கள் ஓர் இரவு முழுவதும் வீதியில் இரவுப் பொழுதைக் கழித்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மட்டுமின்றி காலை விடிந்த பின்னரே கப்பல் போக்குவரத்து ஆரம்பித்தது. ஆனாலும் போக்குவரத்து நெரிசல் குறைய வெகு நேரமானது எனத் துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தலிபான் தீவிரவாதிகள் ஆப்கனில் தாக்குதல்

## எட்டுப் பொலிஸார் உயிரிழப்பு



காபூல்,பெப்.24

ஆப்கானிஸ்தானின் காஷ்னி மாகாணத்தில் பொலிஸ் சோதனைச்சாவடி மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பொலிஸார் பலியாகியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் மத்திய மாகாணமான காஷ்னியில் நேற்று முன்தினம் இரவு சோதனைச்சாவடியினுள் புகுந்த தீவிரவாதிகள்பொலிஸாரைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தினர்.

நாலாபுறமும் இருந்து தீவிரவாதிகள் சுமார் இரண்டு மணி நேரம் நடத்திய தாக்குதலில் 8 பொலிஸார் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்குத் தலிபான் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

# முதல்வர் பதவி கேட்கிறார் ஓ.பி.எஸ்.- தினகரன் பரபரப்பு பேட்டி



சென்னை,பெப்.24
எடப்பாடி பழனிச்சாமி முதல்வர் ஆகி ஓராண்டு ஆவதால் ஓ.பி.எஸ். இப்போது முதல்வர் பதவி கேட்கின்றார் என டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.
கள்ளக்குறிச்சி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பிரபு, சென்னையில் நேற்று டி.டி.வி. தினகரனை சந்தித்து அவருக்கு ஆதரவு தெரிவித்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த டிடிவி தினகரன் கூறியவை வருமாறு:-
ஈ.பி.எஸ். ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆவதால் முதல்வர் பதவியை ஓ.பி.எஸ். கேட்கிறார். பதவி கிடைக்காத விரக்தியில் இருக்கும் அவர், பிரதமர் கூறியமையால் துணை முதல்வர் பதவியை ஏற்றேன் எனக் கூறியிருக்கிறார்.
இப்போது என்னைச் சந்தித்த கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ. பிரபு, ரகசிய ஆதரவாளர் இல்லை. அரசுமீதான நம்பிக்கை வாக்கெடுப்பின்போது மட்டுமே ரகசிய ஆதரவாளர்கள் வெளிப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

## உலகில் மிகச் சிறிய பென்சிலை உருவாக்கி வாலிபர் சாதனை




உத்தரகாண்ட் மாநிலம் ஹால்டுவானியைச் சேர்ந்த ஒருவர் உலகில் மிகச்சிறிய பென்சிலை உருவாக்கி சாதனை புரிந்து உள்ளார்.
பிரகாஷ் சந்திரா உபாத்யே என்பவர் 5 மில்லி மீற்றர் நீளமும் 0.5 மில்லி மீற்றர் அகலமும் கொண்ட ஒரு சிறிய பென்சிலை உருவாக்கி உள்ளார்.
இது தொடர்பாகப் பிரகாஷ் கூறியதாவது:-
இந்தப் பென்சில் ஒரு மரத்தால் ஆனது, மரத்தில் துளையிடப்பட்டு அதில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பென்சிலை உருவாக்க 3 முதல் 4 நாள்கள் வரை எடுத்துக்கொண்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியல்: 81 ஆவது இடத்தில் இந்தியா

புதுடில்லி,பெப்.24
ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் சர்வதேச அளவில் இந்தியா 81ஆஆவது இடத்தில் உள்ளது.
ஆசியப் பிராந்திய அளவில் எடுத்துக் கொண்டால், பத்திரிகைகளுக்கு கருத்து சுதந்திரம் வழங்காத மிக மோசமான நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
உலக நாடுகளின் நிர்வாக நடவடிக்கைகளில் மலிந்திருக்கும் ஊழல் மற்றும் லஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் தரவரிசைப் பட்டியலை சர்வதேச வெளிப்படைத்தன்மை நிர்வாகத்துக்கான அமைப்பு வெளியிட்டு வருகிறது. பூச்சியத்திலிருந்து 100 வரையிலான புள்ளிகளின் அடிப்படையில் நாடுகளின் ஊழல் நிலை வரிசைப் படுத்தப்படுகிறது.




அதன்படி ஒரு நாட்டின் நிர்வாக வெளிப்படைத்தன்மை பூச்சியமாக இருக்கும்பட்சத்தில் அங்கு ஊழல், லஞ்ச லாவண்யம் புரையோடியிருப்பதாகக் கருதலாம். அதே 100 புள்ளிகளாக இருந்தால் அந்நாட்டில் முறைகேடுகளே இல்லைஎன அறிந்துகொள்ளலாம்.
அந்த வகையில் நிகழாண்டுக்கான தரவரிசைப் பட்டியலை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது. அதில் இந்தியா 40 புள்ளிகள் பெற்று 81 ஆவது இடத்தில் உள்ளது. நியூஸிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகள் முறையே 89, 88 புள்ளிகள் பெற்று ஊழல் குறைந்த தேசங்களாக உள்ளன.
ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் மோசமாக குற்றங்கள் அரங்கேறும் நாடுகளில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் விளையாடிய கனடா பிரதமர்



இந்திய அணியின் முன்னாள் வீரர்களான கபில்தேவ் மற்றும் அசாருதீன் ஆகியோர் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ குடும்பத்தினருடன் டில்லி மைதானத்தில் கிரிக்கெட் விளையாடி மகிழ்ந்தனர்.

## எனக்கும் கமலுக்குமான பாதைகள் வேறு வேறு; நோக்கங்கள் ஒன்று




கமலும் நானும் வேறு வேறு பாதைகளில் சென்றாலும் எங்களின் நோக்கம் ஒன்றுதான் என நடிகர் ரஜனிகாந்த் தெரிவித்தார்.
அரசியல் கட்சி தொடங்குவதற்கான கட்டமைப்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நடிகர் ரஜனிகாந்த் மாவட்ட வாரியாக நிர்வாகிகளை நியமித்து வருகிறார். அவ்வகையில், நேற்று நெல்லை மாவட்ட நிர்வாகிகள் நியமனம் தொடர்பாக, நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினார்.
ராகவேந்திரா மண்டபத்தில் நடந்த இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரஜனி,
காவிரி விவகாரத்தில் அனைத்துக் கட்சி கூட்டத்தை நடத்தியது வரவேற்கத்தக்கது. அனைத்து மாவட்ட நிர்வாகிகளையும் சந்தித்த பின் சுற்றுப் பயணம், பொதுக்கூட்டம் பற்றி முடிவு செய்யப்படும். நானும் கமலும் வெவ்வேறு பாதையில் சென்றாலும் மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செல்கிறோம். கமலின் முதல் அரசியல் பொதுக்கூட்டம் நன்றாக இருந்தது. கமலின் மக்கள் நீதி மய்யம் நன்றாகச் செயல்படும் என நம்புகிறேன். அவர் திறமைசாலி என்பதால் சிறப்பாக செயற்படுவார் என்று தெரிவித்துள்ளார்.

### அம்ருதா தொடர்ந்த வழக்கு:

## ஜெயலலிதாவின் இரத்த மாதிரியை அப்பலோவிடம் கோரும் நீதிமன்று

சென்னை,பெப்.24
அம்ருதா தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்று, சென்னை அப்பலோ மருத்துவமனையில் ஜெயலலிதாவின் ரத்த மாதிரி இருக்கிறதா? என்பதைத் தெரிவிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.
ஜெயலலிதாவின் மகள் என்று உரிமை கோரி பெங்களூரைச் சேர்ந்த அம்ருதா என்ற பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். ஜெயலலிதாவின் மகள் என்பதை நிரூபிக்க மரபணு சோதனைக்கு உத்தரவிடவேண்டும் என்றும் அவர் தன் மனுவில் கூறியிருந்தார்.
இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், ஜெயலலிதாவின் அண்ணன் மகன் ஜெ.தீபக், அண்ணன் மகள் ஜெ.தீபா இருவரும் பதில் மனுக்களை தாக்கல் செய்ய உத்தரவிட்டது. அதன்படி இருவரும் பதில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.
இந்த வழக்கில் தங்களையும் மனுதாரர்களாக சேர்க்கக்கோரி அரும்பாக்கத்தைச் சேர்ந்த ஜோசப், தினகரன் ஆதரவாளர் வி.ஏ.புகழேந்தி ஆகியோர் மனுக்கள் தாக்கல் செய்தனர். புகழேந்தி தாக்கல் செய்த மனுவில், அம்ருதா ஜெயலலிதாவின் மகள் இல்லை என்றும், விளம்பரத்துக்காகவும், உள்நோக்கத்துடனும் அவரது மகள் என்று கூறி அம்ருதா இந்த வழக்கை தொடர்ந்துள்ளார் எனவும் கூறியுள்ளார்.
இந்த நிலையில் அம்ருதா தொடர்ந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, சென்னை அப்பலோ மருத்துவமனையில் ஜெயலலிதாவின் இரத்த மாதிரி மற்றும் உயிரியல் மாதிரிகள் இருக்கிறனவா? என்று உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.
இதுதொடர்பாக பதில் அளிக்க அவகாசம் அளிக்கும் படி அரசு தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து மார்ச் 7ஆம் திகதிக்குள் பதில் அளிக்க உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்குவிசாரணையை ஒத்தி வைத்தது.
(பு)

# கமல் மாற்றத்தை ஏற்படுத்துவார்




தமிழக அரசியலில் கமல் மாற்றத்தை ஏற்படுத்துவார் என்று அவரது மகள் சுருதிஹாசன் தெரிவித்துள்ளார்.
நடிகர் கமலஹாசனின் மூத்த மகள் சுருதிஹாசன் தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக உள்ளார். தந்தை அரசியல் கட்சி தொடங்கி இருப்பது பற்றி சுருதிஹாசன் கருத்துத் தெரிவித்துள்ளார். அவரிடம் ஜெயலலிதா மறைவால் தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை உங்கள் தந்தை நிரப்புவாரா? என்று கேட்கப்பட்டதற்கு சுருதிஹாசன் கூறியவை வருமாறு:-
எனது தந்தைக்கு என்று தனியாக கொள்கைகளும், நம்பிக்கைகளும் உள்ளன. அவரது வழியில் அதைப் பின் பற்றிச் செல்கிறார். அவருக்கு எனது ஆதரவு உண்டு.
நான் பணிவுடன் தந்தையைப்பற்றி சொல்வதென்றால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவார். அதற்கு நாம் அவரை வாழ்த்த வேண்டும்.
வெற்றிடத்தை நிரப்ப வேண்டும் என்பது மட்டுமல்ல, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது. அது மகாத்மா காந்தி ஏற்படுத்திய மாற்றத்தைப்போல் இருக்க வேண்டும் என்று நம்புகிறோம்.
எனது தந்தை நாத்திகம் பேசுபவர். நான் மத நம்பிக்கை கொண்டவள். அவரவர் பாதையில் செல்ல வேண்டும் என்று எங்களை ஊக்குவிப்பார். மற்றவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு பின் தொடரக்கூடாது என்று சொல்வார். அவரது அரசியல் கொள்கைகள் பற்றி முழுவதுமாக நான் தெரிந்திருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# நியூஸிலாந்து அணியில் மீண்டும் இஷ் சோதி

மிட்செல் சான்ட்னெர் மற்றும் டொட் அஸ்ட்லே ஆகியோர் காயத்தால் அவதிப்படுகின்றமையால், நியூஸிலாந்து அணியில் இஷ் சோதி சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி நியூஸிலாந்து மண்ணில் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ளது. முதல் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதற்கான 14 பேர் கொண்ட நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுழற்பந்து வீச்சாளரான இஷ் சோதி இடம்பிடித்துள்ளார். சோதி நியூஸிலாந்து அணியில் கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் இடம்பிடித்திருந்தார்.

அதன்பின் தற்போதுதான் அணியில் இடம்கிடைத்துள்ளது. நியூஸிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களான மிட்செல் சான்ட்னெர், டொட் அஸ்ட்லே ஆகியோர் காயம் அடைந்துள்ளனர். இதனால் மாற்று ஏற்பாடாக இஷ் சோதி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.





## குளிர்கால ஒலிம்பிக்:

# பெண்கள் ஐஸ் ஹொக்கியில் தங்கம் வென்றது அமெ.

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் பெண்களுக்கான ஐஸ் ஹொக்கி இறுதிப்போட்டியில் அமெரிக்க அணி திரில் வெற்றியைப் பெற்று தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றது.

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவின் பியாங்சாங் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான ஐஸ் ஹொக்கி இறுதிப் போட்டியில் அமெரிக்கா-கனடா அணிகள் மோதின.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் வழக்கமான நேர முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. கூடுதல் நேரத்தில் யாரும் கோல் போடவில்லை.

இதையடுத்து கடைபிடிக்கப்பட்ட பெனால்டி முறையின் முடிவில் அமெரிக்கா 3:2 என்ற கோல் கணக்கில் திரில் வெற்றியை பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றது. இந்தப் பிரிவில் அமெரிக்கா தங்கம் வெல்வது 1998ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.

# சஹாலின் மோசமான சாதனை

செஞ்சூரியனில் நடைபெற்ற 2 ஆவது ரி-20 போட்டியில் 64 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து மோசமான சாதனையைப் பதிவு செய்துள்ளார் சஹால்.

இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான 2ஆவது ரி-20 கிரிக்கெட் போட்டி செஞ்சூரிய னில் நடைபெற்றது. இதில் 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய தென்னாபிரிக்கா 18.4 ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து இலக்கை எட்டியது.

ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடிய சஹாலுக்கு ரி-20 போட்டி அமையவில்லை. அவரது பந்து வீச்சை தென்னாபிரிக்கா விக்கெட் காப்பாளர் கிளாசன் துவம்சம் செய்தார்.

கிளாசன் 30 பந்தில் 3 பவுண்ரி, 7




சிக்ஸருடன் 69 ஓட்டங்கள் குவித்தார். சஹால் 4 ஓவரில் 64 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்தார். ஒரு ஓவருக்கு சராசரியாக 16 ஓட்டங்கள் வழங்கியுள்ளார். இதில் 2 பவுண்ரி, 7 சிக்ஸர், ஓர் அகலப்பந்து ஆகும். நான்கு பந்துகளில் மட்டுமே ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கவில்லை.

64 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்ததன் மூலம் ரி-20 போட்டியில் அதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுத்த இந்திய பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனையை சஹால் பதிவு செய்துள்ளார். இதற்கு முன் ஜோகிந்தர் சர்மா 4 ஓவரில் 57 ஓட் டங்கள் விட்டுக்கொடுத்ததே மோசமான சாதனையாக இருந்தது. இதை சஹால் முந்தியுள்ளார்.

## தொடர் தோல்வியின் எதிரொலி:

# ஓய்வுபெற்ற வீரரை மீள அழைக்கிறது பங்களாதேஷ்



சர்வதேச ரி-20 தொடரிலிருந்து ஓய்வு பெற்ற மஷ்ரபே மோர்டசாவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மீண்டும் ரி-20 தொடரில் விளையாட அழைத்துள்ளது.

பங்களாதேஷ் அணி சமீபத்தில் நடைபெற்ற முத்தரப்பு தொடர், டெஸ்ட் மற்றும் ரி-20 தொடர் என அனைத்திலும் தோல்வி முகத்தைச் சந்தித்தது.

இந்த நிலையில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் நஷ்முல் ஹாங்ஷன் கூறுகையில்,

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு தொடர் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதற்காக வீரர்கள் தெரிவு செய்யும் கூட்டம் நடைபெற்றது. அப்போது ரி-20 தொடரிலிருந்து ஓய்வு பெற்றுள்ள மோர்டசா, அணிக்குத் திரும்பினால், நன்றாக இருக்கும் என்று அணியின் தேர்வாளர்கள் கூறினர்.

ஏனெனில் சமீபகாலமாக சிறப்பாக செயற்பட்டு வந்த பங்களாதேஷ் அணி, நடந்து முடிந்த தொடர்களில் மிக மோசமான தோல்விகளைச் சந்தித்துள்ளது. அது மட்டு மின்றி அணியின் முன்னாள் வீரர்களான சகிப் அல் ஹசன் போன்றவர்கள் காயம் காரணமாக விலகியுள்ளனர்.

இதனால் அணியை வழிநடத்திச் செல்ல நல்ல அனுபவம் வாய்ந்த வீரர் தேவை என்பதால், அவர் அணிக்கு திரும்ப வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால் இந்த விடயத்தில் அவரைக் கட்டாயப்படுத்தவில்லை, அவர் விருப்பப்பட்டால் மகிழ்ச்சியாக வரவேற்போம் எனக் கூறியுள்ளார்.

# கென்யா கிரிக்கெட் அணியின் கப்டன், பயிற்சியாளர், தலைவர் ராஜினாமா



உலகக் கிண்ணத் தகுதிச்சுற்றுக் கான பிரிவு-2 தொடரில் மோசமாக விளையாடியதால் கென்யா அணியின் கப்டன், பயிற்சியாளர், தலைவர் ராஜினாமாச் செய்துள்ளனர்.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கிறது. ஐ.சி.சி. தரவரி சையில் முதல் 8 இடங்களை பிடிக்கும் அணிகள் தானாகவே உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுவிடும்.

மற்ற இரண்டு அணிகள் தகுதிச் சுற் றின் அடிப்படையில் தேர்வாகும். இந் தத் தகுதிச் சுற்று ஸிம்பாப்வேயில் நடைபெற இருக்கிறது. இதில் கலந்து கொள்வதற்கான பிரிவு லெவன் தொடர் நடைபெற்றது.

கென்யா அணி 2 ஆவது பிரிவில் இடம் பிடித்திருந்தது. 2 ஆவது பிரிவு தொடரில் நடைபெற்ற 6 போட்டிகளில் ஒரு போட்டியில் கூட கென்யா அணியால் வெற்றி பெற முடியவில்லை.

அத்துடன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கெதிராக 218 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்திருந்தது. தோல்வியைச் சந்தித்தது மட்டுமல்லாமல், 2ஆவது பிரிவில் இருந்து 3 ஆவது பிரிவுக்குப்பின் சென்றுள்ளது

இதனால் கென்யா கிரிக்கெட் சபைத் தலைவர், கப்டன் மற்றும் பயிற்சியா ளர்கள் தங்களது பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கோள் காட்டி இணையத்தளம் ஒன்று வெளியிட்டிருக்கின்றது. அதில் முதலாவதாக யார் இருப்பார்கள் என்று நீங்கள் எல்லோரும் இலகுவாக ஊகித்து விடுவீர்கள். அதை விடுங்கள்.

நம் எல்லோரினதும் பேச்சில் அதிகம் அடிபட்ட தமிழர் ஒருவரும் அதில் அடங்குகின்றார். அவர் யார் என்பதை நீங்கள் ஊகிப்பீர்களானால் உண்மையில் இலங்கை அரசியல் களநிலைவரம் நன்கு அறிந்தவர் என்று உங்களுக்கு நீங்களே சான்றிதழ் கொடுக்கலாம்.

நீங்கள் எதிர்பார்த்தபடி முதலிடம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத்தான். அந்தச் சஞ்சிகைப்படி அவரின் சொத்து மதிப்பு என்ன தெரியுமா? 18 பில்லியன் அமெரிக்க டொலர். அதாவது ஆயிரத்து எண்ணூறு கோடி டொலர். அது இலங்கை ரூபாவின்படி சுமார் 2 லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபா. அம்மாடியோவ்...!

இனி வரிசைப்படி பணக்கார அரசியல்வாதிகளின் பெயர்களையும் அவர்களுக்கு உள்ள சொத்து மதிப்பை அமெரிக்க டொலரிலும் தருகிறேன். இலங்கை ரூபாவிலும் அந்தப் பெறுமதியை அறிய விரும்புபவர்கள் 154லினால் பெருக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சரி யார் அந்தத் தமிழர் என்று கேட்கின்றீர்களா?

நான்காவது இடத்தில் இருக்கும் தொண்டமானும் ஐந்தாவது இடத்தில் இருக்கும் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணாவும்தான் தமிழ் அரசியல்வாதிகள்.

இனி வரிசையைப் பார்ப்போம்.

★ முதலாமிடம் – மஹிந்த ராஜபக்ஷ (18 பில்லியன் டொலர்)

★ இரண்டாமிடம் – அமைச்சர் அர்ஜுன ரணதுங்க (6 கோடி 80 லட்சம் டொலர்)

★ மூன்றாமிடம் – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (ஒரு கோடி 40 லட்சம் டொலர்)

★ நான்காமிடம் – ஆறுமுகம் தொண்டமான் (19 லட்சம் டொலர்)

★ ஐந்தாமிடம் – கருணா (17 லட்சம் டொலர்)

★ ஆறாமிடம் – ஏ.எச்.எம். பௌஸி (14 லட்சம் டொலர்)

★ ஏழாமிடம் – முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க (14 லட்சம் டொலர்)

★ எட்டாம் இடம் – ஜே.வி.பியின் எம்.பியான அனுர குமார திஸாநாயக்கா (13 லட்சம் டொலர்)

ஒன்பதாம் இடம் – ஏ.எல்.எம். அதாவுல்லா (9 லட்சம் டொலர்)

பத்தாமிடம் – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க (8 லட்சத்து 60 ஆயிரம் டொலர்)

தகிடுதம் பண்ணும் ஒரு முக்கிய முஸ்லிம் அமைச்சரின் பெயர் இதில் இல்லாமை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அது போலவே குதிரை 'பெட்' கம்பனி நடாத்தும் சிங்கள அரசியல்வாதி ஒருவரின் பெயரும் இதில் இல்லை.

தென்னிலங்கைத் தரப்புகளுடன் ஒப்பிடுகையில் நமது வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் ஏமாளிகள் தாம். ...!

-மின்னல்-

## உ.கிழங்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை ஒரு ரூபாவாகக் காணப்பட்ட விசேட வர்த்தக வரி நேற்று நள்ளிரவு முதல் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடை நிறைவடைந்துள்ளதால் உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் புதிய வரித் திருத்தம் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## ஐ.தே.க. இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மைச் சபைகளைக் கைப்பற்றி ஆளும் தரப்புக்குக் கடும் அச்சுறுத்தலை விடுத்தது.

தேர்தல் தோல்விக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.கவின் ஒருசிலர் தான் காரணமெனக் குற்றச்சாட்டை முன்வைத்த ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி, பிரதமர் தனது பதவியை இராஜனாமாச் செய்தால்தான் தேசிய அரசில் தொடர்வோம் என்றும், பிரதமர் இராஜனாமா செய்யாவிடின் சு.கவின் தனியரசை அமைப்போமென வும் போர்க்கொடி உயர்த்தியிருந்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுகளின் பிரகாரம் அமைச்சரவை மறுசீரமைப்புடன் தேசிய அரசில் தொடர்ந்து பயணிக்க இரு தரப்பும் இணங்கின. அதன் அடிப்படையில் அமைச்சரவை சீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், பிரதமரின் சில கோரிக்கைகளை ஜனாதிபதி நிராகரித்துள்ளார் என அறிய முடிகிறது.

ஐ.தே.கவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பதவிக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளைச் சமாளிக்கும் வகையில், ஐ.தே.கவின் இரண்டாம் மற்றும் மூன்றும் தலைமைகளுக்கு அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகளை வழங்கப் பிரதமர் தீர்மானித்துள்ளார். ஜனாதிபதியுடனான பேச்சில் இதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இளம் தலைமைகளுக்கு பதவிகள் வழங்கப்படத் தீர்மானித்துள்ளதால், தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகி அமைச்சுப் பதவிகளை வகிக்கும் ஐ.தே.கவின் இரு உறுப்பினர்களின் பதவிகளைப் பறிப்பதற்கும் பேச்சுகள் மூலம் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இதன்படி அமைச்சர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கபீர் ஹாசிம், ஹர்ஷ டி சில்வா, சாகல ரத்நாயக்க, லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோரது அமைச்சுப் பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. எவ்வாறாயினும், நிதியமைச்சுப் பதவியில் எவ்வித மாற்றமும் நிகழாது என்று மற்றுமொரு தகவல் தெரிவித்தது.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள அமைச்சர்களின் பதவிகளில் ஏற்படுத்தவுள்ள மாற்றங்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை. (ஐ)

## தூதுவரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதுவர் அமாரி விஜேவர்த்தன பதவி விலகியுள்ளார் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், அவர் பதவி விலகவில்லை என்று வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பதவியில் இருக்கும் உடன்பாட்டின் அடிப்படையிலேயே அவர் பிரிட்டனுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டார் என்றும், அந்த உடன்பாடு எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது.

அதேவேளை, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தங்களால், லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, கொழும்புக்குத் திருப்பியழைக்கப்பட்ட விவகாரத்தை அடுத்தே, அமாரி விஜேவர்த்தன தனது பதவியை விட்டு விலகியதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

## அமைச்சரவை மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் இரண்டு பங்காளிக் கட்சிகளும் தீர்மானித்திருந்தன. அதன் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சரவை மாற்றம் தொடர்பான அறிவிப்புகள் வெளியாகுமென அரச தரப்பினர் கருத்து வெளியிட்டிருந்தபோதிலும், ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு இடையில் இணக்கப்பாடுகள் எட்டப்படாமையால் இழுபறி நிலை தொடர்கிறது.

இந்நிலையில், நேற்று அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, நாளை ஞாயிற்றுக் கிழமை அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்படும் என்று ராஜித தெரிவித்தார். (ஐ)

## களைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசப்பிரிய.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான வேலைகளை மேற்கொண்டு நான் மிகவும் களைத்து விட்டேன். இந்த வேலைகளையெல்லாம் யாரிடமாவது கொடுத்து விட்டு, குறைந்தது ஒரு மாதத்துக்கு விடுமுறையில் சென்று ஓய்வெடுப்பதே நல்லது என நினைக்கிறேன். இதற்கு அரசமைப்பு இடமளித்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விவரங்களை அரசிதழில் வெளியிட்ட பின்னர், இதுபற்றி நான் யோசிக்கவுள்ளேன். வேறு காரணங்கள் எதுவுமில்லை. நான் மிகவும் களைத்துப் போய்விட்டேன் என்று சலிப்புடன் கூறினார். (ஐ)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுடன் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற பேச்சின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்துவத் தலைமுறை உருவாக்கப்பட உள்ளது. உருவாக்கப்படும் தலைமைத்துவ தலைமுறையினரிடம் கருத்துக்களைப் பெற்று மக்கள் வழங்கியுள்ள ஆணைக்குள் தேவையான திருத்தங்கள், முன்னெடுக்கப்படவேண்டிய வேகம், புதிதாகச் செயற்படுத்தப்பட உள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாட எண்ணியுள்ளோம் – என்றார்.

இந்தப் பேச்சில் சஜித் பிரேமதாச, அகிலவிராஜ் காரியவசம், நவீன் திஸாநாயக்க, சாகல ரத்நாயக்க, ஹர்ஷ டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

## அவன்ட்கார்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ஆட்சிக்காலத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபயவின் உதவியுடன் ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம் மற்றும் அவன்ட்கார்ட் நிறுவனம் என்பன உருவாக்கப்பட்டிருந்தன.

இந்த நிறுவனங்களால் அரசுக்குப் பல கோடி ரூபா நிதி இழப்பு ஏற்பட்டது என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கிலிருந்து, தான் உள்ளிட்ட பிரதிவாதிகளை விடுவிக்குமாறு கோட்டாபய கொழும்பு மேல் நீதிமன்றில் கோரியிருந்தார். அந்தக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு மேல் நீதிமன்றம், முன்னாள் பாதுகாப்புச் செயலரின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையிலேயே கொழும்பு மேல் நீதிமன்றின் கட்டளையை மீளாய்வு செய்யுமாறு கோரி கோட்டாபய ராஜபக்ஷவால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுச் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. (ஐ)

## இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செம்மணிப் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயமே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

வடக்கில் அண்மைக் காலமாக இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கச்சதீவுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது. இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு ரேமண்ட் விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோர் இணைந்து பெருவிழாக் கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றுவர்.

குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கான படகு ஒழுங்கை முன்னெடுக்கும் பணி நெடுந்தீவுப் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டிருந்தது. படகுக் கட்டணமாக 600 ரூபா அறிவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை குறிகாட்டுவானுக்குச் சென்றிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள், படகுச் சேவைக்காகப் பல மணி நேரம் காத்திருந்தனர். எனினும் சிங்களப் பக்தர்கள் கடற்படையின் அதிவேகப் படகில் கச்சதீவுக்குப் பயணமாகினர்.

குறிகாட்டுவான் பாலத்தில் காத்திருந்த பலர், ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். இந்த நிலையில் மாலை 3.15 மணியளவில் கடற்படையின் ஏற்பாட்டில் தமிழ்ப் பக்தர்கள் அனைவரும் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்து கச்சதீவுக்குக் கப்பலில் அழைத்துச் செல்லப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கச்சதீவு அந்தோனியார் திருவிழாவின்போது, பக்தர்களின் நலன் கருதி செய்யப்படும் ஒழுங்குகள் தொடர்பில் யாழ்ப்பாண அரச அதிபர் பல்வேறு பணிகளைக் குறிப்பிட்டிருந்தார். எனினும் அவை சீராகச் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழகத்திலிருந்து 62 விசைப்படகில் ஆயிரத்து 532 ஆண் பக்தர்களும், 336 பெண் பக்தர்களும், ஆண் குழந்தைகள் 29 மற்றும் பெண் குழந்தைகள் 23 பேர் என ஆயிரத்து 920 பக்தர்கள் கச்சதீவு சென்றனர். (ஐ)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் அச்சுறுத்தல் உட்படப் பல குற்றச் செயல்களுடன் முப்படை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

ஏற்கனவே கடற்படையினர், இராணுவத்தினர் எனச் சில பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சரத் பொன்சேகா சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சராக நியமிக்கப்பட்டால், அவர் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துவார் என்பதை முப்படை உறுப்பினர்களும் நன்கு அறிவர்.

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட சேவைக்காலத்தில் பொன்சேகாவுக்கு எதிரான மனநிலையில் இருந்து வந்தார். அவரும் இந்தச் செய்தியால் கலவரமடைந்துள்ளார் எனப் பேசப்படுகிறது.

கடந்த அரசின் காலத்தில் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமற்போன சம்பவம் தொடர்பில் வசந்த கரன்னகொட மீது குற்றம் சுமத்தப்படுவதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் கடற்படையினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதுகாப்புப் படையினரில் பெரும்பான்மையானவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றனர். இதனால், கடந்த ஆட்சிக்காலத்தில் மஹிந்த குடும்பத்தினரின் தேவைக்கு அமையக் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை என்பதால், பல குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

கடந்த காலத்தில் நடந்த குற்றச் செயல்கள் தொடர்பாகச் சட்டத்தை அமுல்படுத்துவதாக நல்லாட்சி அரசு வாக்குறுதி வழங்கியிருந்ததுடன் அதனை நிறைவேற்றத் தவறியது.

நீதி மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர்களாகப் பணியாற்றியவர்கள் குற்றவாளிகளைக் காப்பாற்றும் கொள்கையைக் கடைப்பிடித்ததால், இறுதியில் அவர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்ய நேர்ந்தது.

இந்த நிலையில், சரத் பொன்சேகாவைச் சட்டம், ஒழுங்கு அமைச்சராக நியமிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொன்சேகா, இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்படுவதைத் தடுக்கும் முயற்சிகளில் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய படைத்தரப்பு ஈடுபட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொன்சேகா சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவிக்குத் தகுதியற்றவர் எனவும், அவர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டால், தனிப்பட்ட ரீதியான பழிவாங்கல்களில் ஈடுபடுவார் என்றும் அந்த தரப்பினர் செய்திகளைப் பரப்பி வருகின்றனர் எனத் தெரியவருகிறது. (ஐ)

# கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்ற சாரணர் பாசறை







கிளிநொச்சி, பெப். 24

கிளிநொச்சி மற்றும் தென்மராட்ச்சி கல்வி வலயங்களுக்கான 2018 ஆம் ஆண்டிற்கான சாரணர்களுக்கான ஒன்றுகூடலானது கிளிநொச்சி மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு மாவட்ட சாரண ஆணையாளரும், கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபருமாகிய கி.விக்கினராஜா தலைமையில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வுடன் நிறைவுபெற்றது.

இந்த சாரணர்களின் ஒன்றுகூடல் நிகழ்விற்கு கிளிநொச்சி கல்வி வலயத்தின் பத்துப் பாடசாலைகளிலிருந்தும் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆறு பாடசாலைகளிலிருந்தும் மொத்தம் 364 சாரண மாணவர்களில் 307 ஆண் சாரண மாணவர்களும், 57 பெண் சாரண மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இதில் அதிகளவான ஆண் (53)மற்றும் பெண்(29) சாரண மாணவர்கள் கிளிநொச்சி இந்துக்கல்லூரியிருந்து பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்துடன், 25 சாரண ஆசிரியர்களும், 10 வளவாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இந்த ஒன்றுகூடலில் சாரண மாணவர்களுக்கான கூடார ஒழுங்கமைப்பு மற்றும் விசேட பயிற்சிகள், அணிநடைவகுப்பு, விளையாட்டுகள், தீப்பாசறை நிகழ்வு என்பன சிறப்பாக இடம்பெற்றன.

அந்துடன் இந்தச் சாரணர் ஒன்று கூடல் நிகழ்வின் இறுதி நாளான சாரண அமைப்பின் தந்தை பேடன் பவலின் தினமான நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பி.ப 2.00 மணியளவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

கொழும்பு, பெப். 24

பெருந்தோட்டப் பாடசாலைகளின் உடனடி தேவைகளை கருத்தில் கொண்டு அந்த பாடசாலைகளின் நடவடிக்கை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு 45 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் பெருந்தோட்ட பாடசாலைகள் அபிவிருத்தி தொடர்பில் இடம்பெற்ற பேச்சின்போதே இந்த விடயத்தை கல்வி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த அபிவிருத்தித் திட்டம் கல்வி அமைச்சின் பெருந்தோட்ப்பாடசாலைகளின் அபிவிருத்தி பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர், கல்வி அமைச்சின் கட்டட அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் கலாநிதி அபேசுந்தர, சிறந்த பாடசாலை அபிவிருத்தித் திட்ட பணிப்பாளர் பத்மநாதன், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கல்வி அமைச்சின் பெருந்தோட்ட பாடசாலைகளின் அபிவிருத் பணிப்பாளர் திருமதி சபாரஞ்சன் மற்றும் கல்வி அதிகாரிகள், பொறியிலாளர்கள் உள்ளிட்டப் பலர் கலந்துகொண்டனர்.

## ஜும் ஆத் தொழுகையை நிறைவேற்ற

# முஸ்லிம் அரச ஊழியர்களுக்கான சலுகையை தடையின்றி வழங்குங்கள்!

### அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை



கொழும்பு, பெப். 24

அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவின் 12:1 உபபிரிவின் மீளமைக்கப்பட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம், அரச நிறுவனங்களில் பணிபுரியும் முஸ்லிம் ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆத் தொழுகையை நிறைவேற்றவென வழங்கப்பட்ட விசேட சலுகைக்கு வழிவிட வேண்டும் என அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவை வழங்குமாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அந்த அமைச்சின் செயலாளரை கேட்டுக் கொண்டுள்ளனர்.

முஸ்லிம் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமைகளில், தமது மதக் கடமைகளை அனுஷ்டிக்கும் வகையில் 12.00 மணி தொடக்கம் 02.00 மணி வரை வழங்கப்பட்ட விசேட விடுமுறைக்கு அனுமதியளிப்பதற்கு சில அதிகாரிகள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

எனவே, அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த விசேட சலுகைக்கு இடமளித்து, மதக்கடமைகளை சீராக நிறைவேற்றுவதற்காக அதிகாரிகளுக்கு மீண்டும் சுற்றுநிருபம் தொடர்பில் அறிவுறுத்துமாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அந்த அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம் அரச அலுவலர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகை நேரத்தில் தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது என்றும் அரச அதிகாரிகள் இதற்கு அனுமதி மறுக்கின்றனர் என்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் முஸ்லிம் அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே, அமைச்சர் இந்தக் கடிதத்தை அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ளார்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஜும்ஆத் தொழுகை மிகவும் கட்டாயக் கடமை எனவும் எனவே, அவர்களின் மதக் கடமைகளை அனுஷ்டிக்கும் வகையில் அரச நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சு ஏற்கனவே வழங்கிய சலுகையை சில அதிகாரிகள் மறுக்கின்றனர் எனவும், வேறு சில அதிகாரிகள் இந்த விடயத்தில் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றமையால் முஸ்லிம் அரச ஊழியர்கள் வேதனை அடைந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தனியார்துறையினரும் முஸ்லிம்களின் சமய வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்த விசேட சலுகையை வழங்குவதை உறுதிப்படுத்துமாறும் அமைச்சர் கோரியுள்ளார்.

# இந்திய நிதியுதவியின் கீழ் காலியில் வீடமைப் புத்திட்டம்!

இந்திய நிதியுதவியின் கீழ் காலி மாவட்டத்தில் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்காக 3 வீடமைப்பு திட்டங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக 6 கோடியே 66 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக வீடமைப்பு அதிகார சபையின் காலி மாவட்ட செயலாளர் டி.எல்.எஸ்.டி.சேனாநாயக்க தெரிவித்தார்.

எல்ப்பிட்டிய ,யக்கலமுல்ல, அக்மின ஆகிய பிரதேச சபைகளுக்குட்ப்பட்ட பிரிவுகளிலேயே இந்த வீடமைப்பு திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஒருவீட்டமைப்புத்திட்டத்தில் 24 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. ஒரு வீட்டை அமைப்பதற்கு 5 இலட்சம் இந்திய ரூபா நிதி வழங்கப்படவுள்ளது.

குறைந்த செலவுக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே இந்த வீடமைப்புத் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

பிரதேச செயலாளர்களின் சிபாரிசுக்கு அமைவாகவே குறைந்த வருமானம் பெறுவோர் இந்த வீடமைப்புத் திட்டத்திற்காக தெரிவு செய் யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த உயர்தர பரீட்சை விண்ணப்பத் திகதி நிறைவு

கொழும்பு, பெப். 24

கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் நேற்றுடன் நிறை வடைந்தது என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எந்தவித காரணங்கள் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்றும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# உள்நாட்டு கட்டட வடிவமைப்பாளர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்: அமைச்சர் சஜித்



நாட்டில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளின்போது உள்நாட்டு கட்டட வடிவமைப்பாளர்களுக்கு முதலிடம் வழங்கப்படும் என்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதற்காக கட்டட வடிவமைப்பாளர்களின் கூடுதலான பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை கட்டட வடிவமைப்பாளர் நிறுவகத்தின் 35 ஆவது நிறைவாண்டு நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# டெங்கு நோய் ஒழிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

தற்போது வறட்சியுடனான காலநிலை நிலவுவதால் டெங்கு நோய் தொடர்பிலான அவதான நிலை குறைவடைந்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்று இந்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

சமீப காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் அதிகரித்திருந்தது.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் காணப்பட்ட கொலன்னாவ பிரதேசத்தில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொடிக்காவத்த முல்லேரியா பிரதேசசபை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் வீடுகள் திறந்த வெளிகளில் இருந்த சேதமடைந்த பொருள்களின் களஞ்சிய சாலைகள், தயாரிப்பு நிலையங்கள் உள்ளிட்டவை பரிசோதிக்கப்பட்டன.

டெங்கு நோய் பரவக்கூடிய சுற்றாடலை கொண்டிருந்த நபர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கின்னஸ் சாதனையாளர் நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், பெப்.24

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பழைய மாணவனும் உலக சாதனையாளருமான அருளானந்தம் சுரேஷ் ஜோக்கிம் உலக நாடுகளின் சமாதானம், வறிய மாணவர்களின் கல்வி மேம்பாடு போன்றவற்றிற்காக 'வறுமையை ஒழிப்போம். போர் வேண்டாம், நோயை எதிர்ப்போம்' எனும் மையக் கருத்தின் அடிப்படையில் 'வேள்ட் விஷன்' நிறுவனத்தின் ஆதரவுடன் உலக மரதன் ஓட்ட நிகழ்வை மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில், இவர் இதுவரை 270 நாள்களில் 72 நாடுகளில் 123 நகரத்தில் தனி மனிதனாக நின்று மரதன் ஓட்டச்சாதனையை நிகழ்த்தி, இதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நிதியை உலக சமாதானத்திற்காக கொடுப்பதற்கு மிகவும் கடினமாக உழைத்து வருகின்றார்.

இதன் முக்கிய கட்டமாக இலங்கை வந்துள்ள அருளானந்தம் சுரேஷ் ஜோக்கிம் நேற்று வவுனியாவுக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு அங்கு வரவேற்பளிக்கப்பட்டது.

இன்று காலை அவர் கிளிநொச்சியை வந்தடைவார். நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் சாவகச்சேரியிலிருந்து யாழ். நகரம் நோக்கித் தனது மரதன் ஓட்டத்தை மேற்கொள்வார்.

யாழ். வரும் இவர், தான் ஏந்தி வரும் சமாதான தீபத்தை இறுதியாக யாழ். ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் கையளிப்பார்.

தொடர்ந்து நாளை மறுதினம் காலை 7.30 மணியளவில் பெரியவிளான் சந்தியிலிருந்து மரதன் ஓட்டத்தை ஆரம்பித்து தனது கல்லூரியான இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் வணபிதா இ.கொட் விறீ ஜோயலிடம் சமாதான தீபத்தைக் கையளித்து, இலங்கையில் தனது மரதன் ஓட்டத்தை நிறைவு செய்வார். (ஐ- 100)


வவுனியாவில் வரவேற்பு















இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.